Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 | மலர் 13
போன் 389 | தேசிய தினசரி | இதழ் 55

யாழ்ப்பாணம் பங்குனி 23 ஸபர் 9 செவ்வாய்க்கிழமை (6-4-71)

## பல இடங்களில் பருப்பு, சீனி பதுக்கல் கண்டுபிடிப்பு

கோட்டை, திங்கள்

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, நுகேகொடை ஆகிய இடங்களில் இன்று கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன திடீர் பரிசோதனைக் குழுவினர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது பருப்பு சீனி முதலிய அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பெருமளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிக்கொணரப்பட்டதும் அந்தந்த இடங்களிலேயே கட்டுப்பாட்டு விலைக்குப் பொது மக்களுக்கு விற்கப்பட்டதாக கூ. மொ. வி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

......

### இன்று

யாழ்ப்பாணம் செவ்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான 16ந் திருவிழாவான இன்று இரவு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் 'மாமனுக்குகந்த மாதேவன்' என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன' சப்பரத்தில் சுவாமி வீதிவலம் வருவார்.

---

### கண்டி, பதுளை, நுவரெலியா, அம்பாறை, மொனறுகலை

# ஐந்து மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல்

## மாலை 7 மணி முதல் காலை 5வரை வீட்டிலிருக்கக் கோரிக்கை

### வெள்ளவாயா பொலிஸ் நிலைய தாக்குதலில் பொலிசார் உட்பட 4பேர்பலி

கோட்டை, திங்கள்

கண்டி, பதுளை, மொனறுகலை, அம்பாறை, நுவரெலியா மாவட்டங்களில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவசரகாலச்சட்டத்தின்கீழ் இந்த மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க நேர்ந்ததற்காக அரசாங்கம் கவலை தெரிவிக்கும் அதேசமயம் நிலைமை சீராகும்வரை இந்த உத்தரவுக்குப் பணிந்து மாலை 7 மணி முதல் காலை 5 மணி வரை எல்லோரும் தங்கள் வீடுகளில் இருக்கும்படியும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

## தாக்குதலில் பொலிசார் உட்பட நால்வர் பலி

இன்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கிளர்ச்சிக்காரர் சிலர் தம்பலகேவா என்ற இடத்தில் மோட்டார் லொறியொன்றைத் தடுத்து நிறுத்தி, அதைப் பலவந்தமாக எடுத்துப் பொத்துவிலை நோக்கிச் சென்றனர். அச்சமயம் அந்த வீதியில் வந்த பொலிஸ்ஜீப் வண்டியொன்றின்மீது அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

இதன் பின் காலை 5-30 மணியளவில் சுமார் 40அல்லது 50 பேர் கொண்ட கிளர்ச்சிக்காரர் கோஷ்டியொன்று கைக்குண்டுகளுடனும், துப்பாக்கிகளுடனும் வெள்ளவாயாப் பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலின் விளைவாகப் பொலிஸ்நிலையத்தில்கடமையாற்றிக்கொண்டிருந்த ஜேமிஸ் என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஸ்தலத்திலேயே மாண்டார். இக்கலகத்தைத் தனது வீட்டில் இருந்து கவனித்துக்கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் குணசேகரா என்பவர் பொலீஸ்நிலையத்துக்கு விரைந்து வந்துகொண்டிருக்கையில் வெள்ளவாயாச் சந்தியில் வைத்துக் கிளர்ச்சிக்காரரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### மரண அறிவித்தல்

**கனகரத்தினம் அப்பையா**

இளைப்பாறிய நீர்ப்பாசனத்திணைக்களஓவசியரும் சிவயோகத்தின் அருமைக் கணவரும், இராஜேஸ்வரி, கிருஷ்ணமூர்த்தி(லண்டன்) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும்,க சச்சிதானந்தன் (ஆராய்ச்சியாளர், கடற்றொழில் திணைக்களம்) அவர்களின் மாமனாரும் ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் மைத்துனருமாகிய க. அப்பையா அவர்கள் 5-4-71 நண்பகல் காலமாகிவிட்டார்கள் அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-4-71செவ்வாய்க்கிழமைபிற்பகல் 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

19/4, சிவப்பிரகாசம் றோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

### சிரசாபிஷேகம்

யாழ்ப்பாணம். செவ்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் இன்று மாலை 4 மணிக்கு ஈழத்துச்சித்தர் திருமுருக திருநாவுக்கரசு சுவாமிகள் 201 இளநீர்களை தன்தலையிலடித்து சிரசாபிஷேகம்செய் [illegible] பிரசாதமும் வழங்குவார்.

## கடற்படை, விமானப்படை சிப்பந்திகளின் லீவு ரத்து

கடற்படைச் சிப்பந்திகளின் லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டன. லீவில் சென்றோர் அனைவரும் உடனடியாக அந்தந்தப்பகுதி முகாம்களில் ஆஜராகவேண்டுமென்று கடற்படைத் தளபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விமானப்படைச் சிப்பந்திகளின் லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. நாளை 5ந் திகதி காலை 8 மணிக்கு முன் சேவைக்கு வருமாறு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## 480 பேர் கைது

நாட்டில்நாசகாரச் செயல்களில் ஈடுபட முயன்றதாக நேற்று 480 பேர் கைது செய்யப்பட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

### பொலிஸ் நிலையங்களில் காவல்

கோட்டை, ஞிங்கள்

நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் செய்வார்கள்.

சகல பொலிஸ் நிலையங்களிலும் யந்திர துப்பாக்கியுடன் காவல் புரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

லைசென்ஸ் உள்ளவர்களிடம் உள்ள துப்பாக்கிகள் பொலிசாரினால் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. அனுமதி பெற்ற தோட்டா விற்பனையாளர்களும் பொலிசாரினால் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர்.

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

கோட்டை, திங்கள்

அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நீக்கப்பட்டுவருகிறது. கடந்த சில மாதங்களில் 5,000 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

கல்வியமைச்சின் அறிவித்தல் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் பத்திரிகை நிருபர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் சுமார் 17,000 வெற்றிடங்கள் உள்ளதாகவும், சில பாடசாலைகள் அதிபர்கள் இல்லாது இயங்குகின்றன என்றும் அந்த உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும்படி கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத், கல்வி இலாகாவுக்கு அறிவித்துள்ளதாகவும், முக்கியமாகச் சிங்கள மொழி மூலமான விஞ்ஞான, வர்த்தக ஆசிரியர்களே தேவைப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்

### சிவபாலயோகி மகராஜ் சுவாமிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிவபாலயோகி மகராஜ் சுவாமிகள் தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு இம்மாதம் 9ந் திகதியே இந்தியா திரும்புகிறார் யாழ்ப்பாணத் திவ்ஜ ஜீவன சங்கத்தின் அழைப்பின்மீது யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த சுவாமிஜி நேற்று முன்தினம் மாலை ஆறு மணிக்குக் கொழும்பு பயணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வண்ணார்பண்ணை பெருமாள் கோயிலுக்கு ஒரு மடப்பள்ளி ஐயர் தேவை. சம்பளம் நேரில் பேசலாம் மனேச்சருடன் தொடர்பு கொள்ளவும். 2752

### தவறிவிட்டது

லைசென்ஸ்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனகரெட்னம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் 24-3-71ல் யாழ் பஸ்நிலையத்தில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் கொடுக்கவும். 2748

### SCOOTERS FOR SALE

2 Sri VESPA 150 C C and 5 Sri LAMBRETTA 150 Sx can be seen during working hours at Co-op. Bank Main Street Jaffna

2754

### விற்பனைக்கு

அரிசி மில்:

70 மூடை அரிசி கோட்டர், பிளாக்ஸ்ரோன் இஞ்சின் 26 H P, No 1, No 7, கல்லர், கிறைண்டர், அடுப்பு தளபாடங்களுடன் விற்பனைக்கு உண்டு. விபரம்: சி. இராசரத்தினம், அடைவுபிடிப்பவர், 5-ம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம்.

2749

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## ஜே. பி.யாக நியமனம்

யாழ்ப்பாணம். செவ் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம் சமாதான நீதவானாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபராவார்.

## உரை

யாழ்ப்பாணம், செவ்வாய் வல்வை வைத்தீஸ்வரன் கோவிலில் மாலை 6 மணி முதல் வேதத்திற்குப் பொருளுரைத்த திருவிளையாடலும் இரவு 8-30 மணி முதல் மருதடி விநாயகர் ஆலயத்தில் 'முருகனும் மூதாட்டியும்' என்ற பொருள் பற்றியும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் இன்னிசை விரிவுரை ஆற்றுவார்.

## உலக பௌத்த மகாநாடு

கோட்டை, திங்கள் அடுத்த மாதம் 8-ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் உலக பௌத்த மகாநாட்டில் அறுபது நாடுகள் பங்கு பற்றவிருக்கின்றன. இது சம்பந்தமாக அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் பௌத்த கலைக்காட்சி ஒன்றைக் காண்பிக்கவிருக்கிறது. இம்மகாநாட்டுக்கான நிகழ்ச்சிகளை அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் குணபால மலலசேகரா ஒழுங்கு செய்து வருகிறார்.

# பாண்டிருப்பு செய்திகள்

## முற்போக்குகருத்துகள்

பாண்டிருப்பு, திங்கள் "இன்றைய நிலைமையில் தமிழ் நாடகங்கள் பூரண வெற்றி அளிப்பதாயின் நாடக எழுத்தாளர்கள் முழுக்க முழுக்க முற்போக்கு கருத்துக்களை புகுத்துதல் அவசியமாகும். அப்போதுதான் முன்னேற்றப்பாதையை எதிர்நோக்கியுள்ள எமது சமுதாயத்துக்கு நன்மை உண்டாகும்."

இவ்வாறு கல்முனை கலைக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமைதாங்கி உரைநிகழ்த்திய குருமண்வெளி அருட்பிரகாசம் கூறினார். கல்முனை மா யோசேப்பின் வணக்கப்பாடலுடன் ஆரம்பமான இக்கூட்டம் 'கல்வி நிலைய' மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: போசகர்: திரு. ஆர். பேரின்பராஜா, தலைவர்: குருமண்வெளி அருட்பிரகாசம், துணைத்தலைவர் 'மூல்லை வீரக்குட்டி, செயலாளர், திருமகள், பொருளாளர்: கல்முனை மா யோசேப் 7பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

## பாண்டியன் வெற்றி

மட். பெரியகல்லாறு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது 'பாண்டியன்' இல்லம் முதலிடம் பெற்றது. 'சோழன்', 'சேரன்' ஆகிய இல்லங்கள் இரண்டாம் மூன்றும் இடங்களைப்பெற்றன. பிரதமவிருந்தினராக கல்வி அதிகாரி திரு. எஸ் சிவநாதன் கலந்துகொண்டார்.

0 0 0

## சிரமதானம்

கல்முனை பங்கு கத்தோலிக்க வாலிப இயக்கத்தினரால் கல்முனை திரு இருதய ஆண்டவர் கோயில் சுற்றுப்புறத்திலிருந்த பற்றைக் காடுகள் வெட்டி சீராக்கப்பட்டன.

இந்த புனித சிரமதானப் பணி வண சகோதரர் எம் இம்மானுவேல் எஸ் எஸ் ஜே தலைமையில் நடைபெற்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 6—4—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 பக்திப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344மீ அன் 49 மீ**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ அன்ட 61 மீ**

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர்விருந்து, 5-45 கல்விச் சேவை.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 உரை, 7-15 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, 10-30 செய்தித் தொகுப்பு.

## அறிவித்தல்

### மின் விநியோகத் தடை

**தட்டாதெரு உப மின்நிலையத்திலிருந்து பயனடையும் பாவனையாளர்களுக்கு**

மேற்படி உப மின்நிலையத்துடன் தொடர்புள்ள ஐயனார் கோவில் வீதிச் சந்தி காங்கேசன்துறை வீதிச் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக உள்ள மின் இணைப்புப் பாதையில் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் 1971-ம் ஆண்டு சித்திரை (ஏப்ரல்) மாதம் 7-ந் திகதி காலை 8-30 மணி தொடக்கம் மாலை 5-30 மணி வரையும் அப்பாதையிலுள்ள மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-4-71. 3231

வடபகுதி

## மிளகாய் உற்பத்தியாளர் கவலை

உடுப்பிட்டி, திங்கள் வடபகுதியில் மிளகாய் உற்பத்தியில் அதிக வருவாய் பெறலாமென விவசாயிகள் கொண்டிருந்த நம்பிக்கையில் இடிவிழுந்துள்ளது. முற்றிவரும் மிளகாயை ஒருவகைப் புழுக்கள் தாக்கி இடித்து விழுத்தி விடுவதால் இப்பகுதி விவசாயிகள் பீதியடைந்துள்ளனர். வடபகுதியிலுள்ள மிளகாய்த் தோட்டங்களில் இப்புழுக்கள் பெருவாரியான சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அரசாங்கம் மிளகாய்க் கொள்வனவு செய்துவரும் இவ்வேளையில் இப்புழுக்கள் மிளகாய் உற்பத்திக்கு ஒரு சவாலாக விளங்குவதாகவும் விவசாயப் பயிர் ஆராய்ச்சிநிலையம் இப்புழுக்களை அழிக்க உடன் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரியுள்ளனர்.

## கால்நடைகள் மடிகின்றன

சுழிபுரம், திங்கள் கடந்த சில தினங்களாக சுழிபுரம் பகுதியில் கால்நடைகள் திடீர் மரணம் அடைகின்றன. ஒருவித கால்நடை நோய் காரணமாக இக்கால்நடைகள் இறக்கின்றனவோ என மக்கள் அஞ்சுகின்றனர்.


## அறிவித்தல்

இங்கிலாந்தில் (U. K.) கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் ஓர் அறிவித்தல் உங்கள் பிள்ளைகளின் சாசனம் (Bond) உறுதிப்படுத்துதல் சம்பந்தமாக உடனடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

சபா. சின்னத்தம்பி,
150, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

2-4-71. 2611



ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா தினங்களில் 4 காட்சிகள்
ராஜேந்திரகுமார் வைஜந்திமாலா நடித்த
**சாதி**
(கலர்—ஹிந்தி)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

வின்ஸர்—யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ மாஸ்டர் பிரபாகர்
பேபி சுமதி லட்சுமி
மனோரமா, வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
**வா ராஜா வா**
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சி
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

இன்று மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
**சிவந்த மண்**

நாளைமுதல்
கெப்பிட்டல் - பிளாஸா மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
**மூன்றெழுத்து**
(கலர்ப்படம்)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30,
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் -விஜயகுமாரி
நடித்த
**குழந்தையும் தெய்வமும்**

REGAL - Jaffna
Daily 4-45, 7& 9-45 p m
Poya days 4 Shows
Birth Rynolds
in
NAVAJO JOE

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
**அன்றுகண்டமுகம்**

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am & 4 15,p.m.
Spell Binding Suspence
Thriller
BANDITS in ROME

6-30, 10-00 மணி
சிவாஜி கணேசன்
சௌகார்ஜானகி
நடித்த
**லக்ஷ்மி கல்யாணம்**
(புதிய புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்காவில் கொள்ளை நோய் பரவும் அபாயம்!

## செய்தி திரிக்கப்படுவதாக பிரி. பிரயாணி தகவல்

கராச்சி, ஏப் 5

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதியேற்படுத்த ராணுவ ஆட்சியாளர்கள் தம்மாலான முயற்சிகளை எல்லாம் செய்துவருகிறார்கள் என்று பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

வீண்வதந்திகளுக்கு செவிசாய்க்க வேண்டாமென்று ராணுவ அதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். கிழக்குப்பாகிஸ்தானில் தொடர்ந்தும் ராணுவத்துக்கு எதிர்ப்பு இருந்துவருவதாக வெளியான இந்திய செய்திகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் மறுத்துள்ளனர். முக்கிய நகரங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதாகவும் கூறப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளில் ஒரு கோஷ்டி நாடுதிரும்பியிருக்கின்றது. அவர்களில் பலரும் அங்கு நடக்கும் சம்பவங்கள் குறித்து எதுவும் கூறமறுத்துவிட்டார்கள். அவர்களில் எஞ்சினியரான ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் அங்குள்ள நிலைமை குறித்து மிகைப்படுத்தப்பட்ட தகவல்களே வெளியாகியிருப்பதாகக்குறிப்பிட்டார். மார்ச்மாதம் 25-26ம் திகதிகளில் துப்பாக்கிப்பிரயோகங்கள் இருந்தனதான் என்றும் ஆனால் பின்னர் ராணுவத்தினர் தம்மீது சுடப்பட்ட சமயங்களில் மாத்திரமே திருப்பிச் சுட்டார்கள் என்றும் அவர் சொன்னார்.

### டாக்காவில் கடும் தொற்றுநோய்?

டாக்காவில் கடும்தொற்றுநோய் பீதி ஏற்பட்டிருப்பதாக புதுடில்லிக்குகிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. வைசூரி காலரா போன்ற நோய்கள் பரவாமல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாம். தெருக்களை சுத்தம் செய்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

ஒருவாரத்துக்குமேல் நடைபெற்றுவரும் கலவரங்களின் காரணமாக மேற்குப்பாகிஸ்தானுக்கும் கிழக்குப்பாகிஸ்தானுக்குமிடையில் தகவல் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளனவாம். கிழக்குப்பாகிஸ்தானில் உணவுப்பண்டங்கள் யாவும் மிகமோசமாக விலையேற்றப்பட்டுள்ளனவாம்.

### ரங்பூரில் ராணுவம் பின்வாங்குகின்றது?

ரங்பூரில் ராணுவத்தினர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆதரவுபடைகளின் எதிர்த்தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் வெளியேறியிருக்கிறார்களாம். ராஜ்சாகியில் ராணுவத்தினர் விடுதலைப் படைகளின் கடும் நெருக்குதலுக்குள்ளாகியுள்ளனர். ஜெசூருக்கு அருகே டாக்காவுக்கு செல்லும் வழியில் முச்சந்தியொன்றை ராணுவம் மீண்டும் கைப்பற்றியிருக்கிறதாம்.

கொரில்லாவின் விடுதலைப் படைகளை எதிர்த்த ஒரளவு ராணுவ அணியொன்றின் சிப்பாய்கள் 70 பேர் கொல்லப்பட்டார்களாம்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பாத பிரயாணி ஒருவர் தெரிவித்த தகவலில் டாக்காவிலும் இதரபகுதிகளிலும் ராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களின் கோர விபரம் தெரியவந்துள்ளதாம்.

பேராசிரியர்களும், அவர்களின் குடும்பத்தவர்களும், குழந்தைகளும் மாணவர்களும் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டார்களாம். பிரிட்டிஷ் நிலையமொன்றைக் காவல் புரிந்து கொண்டிருந்த கிழக்குப்பாகிஸ்தான் துப்பாக்கிப்படையின் முழுப்பேரும் கொல்லப்பட்டார்களாம். பொலிஸ் முகாம்களுக்கும் இதேகதிதான் நடந்ததாம்.

### கிழ.வங்கத்துக்கு இந்திய ஆயுதம்?

இந்தியஅதிகாரிகள் கொடுத்த இராணுவ சாதனங்களை ஏற்றிக்கொண்டு சம்ஷே நகருக்குச்சென்ற 9 வாகனங்களைப் பாகிஸ்தான் ராணுவம் கண்டு, அவற்றை முற்றாக அழித்துவிட்டதாக இலங்கையிலுள்ள பாகிஸ்தானிய ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

சூயஸ்கால்வாயைத் திறக்கும்

## சதாத் யோசனையை மீண்டும் மெயர் நிராகரித்தார்

டெல அவிவ் ஏப். 5

சூயஸ் கால்வாயைப் போக்குவரத்துக்குத் திறந்துவிடுவது சம்பந்தமாக ஐக்கிய அரபுக்குடியரசு தெரிவித்தயோசனையை இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயர் நிராகரித்துவிட்டார்' மேற்காஸியாவில் அமைதிக்காக்கும் படையொன்றை நிறுத்திவைக்கும் யோசனைக்கு அவர் இணங்கமறுத்துள்ளார்.

ஜெருசலத்தில் தொழிலாளர் கட்டமொன்றில் பிரதமர் மெயர் பேசுகையில் மேற்கண்ட கருத்தைவெளியிட்டார்.

சூயஸ்கால்வாய் மீண்டும் திறக்கப்படுவதை நாம் வரவேற்பேசம் அதற்காகப் பேச்சுவார்த்தைகளில் இறங்கவும் தயார் அதற்காக எகிப்தியரதும் ரஷ்யர்களதும் திட்டங்களுக்குப் பணியவேண்டுமென்பதில்லையென்று பிரதமர் மெயர் கூறியதாகத் தெரிகிறது.

சைனாய்ப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேல் வெளியேறப்போவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அரபு நிலத்தில் எப்பகுதியையும் விட்டுக்கொடுத்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட நாம் சம்மதிக்கமாட்டோம் என்று எகிப்திய அதிபர் அன்பர் சதாத் கெய்ரோவில் அறிவித்திருக்கிறார்.

## 'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் "சோவியத் நாடு"

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.



'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,

27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு-7

## வேலையற்ற பொறியியலாளர்

கோட்டை, திங்கள்

சென்ற வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவிலிருந்து சித்திபெய்திய 188 மாணவர்கட்கு இதுவரை வேலை கிடைக்கவில்லை ஆனால் மேலும் 250 பொறியியலாளர் இவ்வருட ஆவணியில் இப் பல்கலைக்கழகத்திலிருந்தும் கட்டுப்பெத்தையில் இருந்தும் வெளியேறவிருக்கின்றனர். இவர்கட்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்படவேண்டுமென காலி தொகுதி எம். பி. டாக்டர் டபிள்யு. தகநாயக்கா பிரதமரைக் கேட்டுள்ளார்.

## சோவியத் அதிபர் விடுத்த வேண்டுகோள்

கிழக்குப் பாகிஸ்தானில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ரத்தக் களரியையும் அடக்குமுறையையும் முடிவுக்கு கொண்டுவரும்படி பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கு சோவியத் அதிபர் நிக்கலாய் பொட்கோர்னி வேண்டுகோள் விடுத்துள்ளார் அல்லவா? அந்தவேண்டுகோளில் முழு விபரத்தையும் டாஸ் வெளியிட்டுள்ளது

அது பின்வருமாறு:

ஜனாதிபதி அவர்களே,

டாக்கா பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்ட செய்தியையும் தீவிரமான நடவடிக்கைகளில் ராணுவ நிர்வாகம் குதித்துவிட்டதென்ற செய்தியும், இதற்காக கிழக்குப்பாகிஸ்தான் பொதுமக்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்ட செய்தியையும் பெரும் பீதியுடன் கேள்வியுற்றோம்.

இதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரமாண்டமான உயிர்ச்சேதத்தையும், அவஸ்தையையும், கஷ்டநிஷ்டூரங்களையும் பார்த்து சோவியத் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அண்மையில் நடந்தேறிய பொதுத்தேர்தலில் கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் மிகப் பெருவாரியோரின் சந்தேகத்துக்கிடமற்ற ஆதரவைப் பெற்ற முஜிபுர் ரஹ்மான் மற்றும் அரசியல் தலைவர்கள் கைதாக்கப்பட்டதையும் வேட்டையாடப்படுவதையும் கேட்டு சோவியத் யூனியனில் அச்சம் தோன்றியுள்ளது.

பாகிஸ்தான் மக்கள் சீரும் சிறப்பும் செழிப்புமடைய வேண்டும் என்று எப்போதுமே சோவியத் மக்கள் அவாவுற்று வந்துள்ளனர். நாட்டை எதிர்நோக்கிய சிக்கலான பிரச்னைகளை ஜனநாயக ரீதியாக தீர்த்து வெற்றியடையும்போது சோவியத்மக்கள் உவகையுற்றனர்.

பாகிஸ்தான் மக்கள் சோதனைக்குள்ளாகி நிற்கும் இந்நாட்களில் நாம் சில வார்த்தைகளைக் கூருமல் வாளாவிருக்க முடியாது. இது உண்மையான நண்பர்களின் வார்த்தைகளாகும்.

அண்மையில் பாகிஸ்தானில் தோன்றியுள்ள சிக்கலான பிரச்னைகளை பலாத்கார பிரயோகமின்றி அரசியல்வழியாக தீர்க்கமுடியும், தீர்க்கப்படவேண்டும் என்று நாம் பூரணமாக நம்புகிறோம். கிழக்குப் பாகிஸ்தானில் அடக்குமுறையும், ரத்தக் குளிப்பும் தொடர்ந்து நடப்பது இப்பிரச்னைகளை மேலும்மோசப்படுத்துவதாக மாத்திரமே இருக்கமுடியும்; முழு பாகிஸ்தான் மக்களினதும் ஜீவாதார நலன்களுக்கு பெரும் தீங்கு விளைவிப்பதாக மாத்திரமே இருக்க முடியும்;

ஆகவே, ஜனாதிபதி அவர்களே சோவியத் பாராளுமன்றத்தின் தலைமைக் குழுவின் சார்பில் உங்களுக்கு வேண்டுகோள் விடுப்பதை எமது கடமையாக கருதுகிறோம். கிழக்குபாகிஸ்தான் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள ரத்தக் களரியையும் அடக்குமுறையையும் நிறுத்த மிக அவசர நடவடிக்கை எடுக்கும்படி உருக்கமாக வேண்டுகோள் விடுப்பதுடன் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும் திசைக்கு திரும்பும் படியும் கேட்டுக்கொள்கிறோம் இது முழு பாகிஸ்தான் மக்களின் நலன்களுடன் உடன்பாடுடையதாகும் அப்பிரதேசத்தில் சமாதானத்தை நிலைநாட்ட ஏதுவாய் இருக்கும் என்று நாம் விஸ்வாசிக்கிறோம்.

தலைதூக்கியுள்ள பிரச்னைகளுக்கு சமாதானபூர்வமான பரிகாரம் காணப்பட்டால் சோவியத் மக்கள் யாபேரும் சந்தோஷமடைவார்கள்.

மனித உரிமை பிரகடனத்தில் பதிவாகியுள்ள மனிதாபிமான கோட்பாடுகளாலும் பாகிஸ்தான் தேச மக்களின் நல்வாழ்வு மீது கொண்ட பெரும் பற்றுதலாலும் உந்தப்பட்டு இவ்வேண்டுகோளை விடுக்கிறோம்.

ஜனாதிபதி அவர்களே. இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்ட நோக்கத்தை நீங்கள் சரியாக புரிந்துகொள்வீர்கள் என்று நாம் நம்புகிறோம்

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதியும் நீதியும் சீக்கிரத்தில் தோன்றும் என்பதுவே உள்ளார்ந்த ஆசையாகும்.

## கடமையும் உரிமையும்

யாழ்ப்பாணம் திங்கள்

"ஒரு நாள் மட்டுமே கடமையாற்றினாலும் "இப்பாடசாலையே என் பாடசாலை" என்ற கடமையுணர்ச்சியுடன் பணிபுரிய வேண்டும் இத்தகைய ஆசிரியர்களாற்ருன் மாணவர்களும் சமுதாயமும் நாடும் நன்மையடையும் திரு. பஞ்சாட்சரம் இத்தகைய உயர்ந்த சேவா உணர்ச்சியுடன் கூடியவர் அன்னாரின் முன்மாதிரியை மற்றைய ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும் கடமையைச் சரியாகச் செய்து கொண்டு உரிமையையும் நிலைநாட்டும் நல்லாசான் அவர்" என்று உசன் இராமநாதன் வித்தியாலய ஆசனவைத் தலைவர் திரு வி சவணபவன் மகாவித்தியாயத்தில் நடைபெற்ற திரு. ஆ. வே. பஞ்சாட்சரத்தின் பிரியாவிடைவிழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிற்குறிப்பிட்டார் வித்தியாலய உப அதிபர் திரு. வே. க. நடராசா பேசுகையில் "வகுப்பிற்குப் போகாமல் என்னால் இருக்க முடியாது என அடிக்கடி கூறுபவர் திரு, பஞ்சாட்சரம் அவருடைய சேவையைத் தொடர்ந்து நாம் பெருதது துரதிர்ஷ்டமே" எனக் கூறினர்,

திரு ஐ. வதராசா திரு. வி க தம்பு ஆகியோரும் ... கியோரும் பேசினர், ஆசானவைச் சார்பில் திரு. பஞ்சாட்சரத்துக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

## கடலட்டை ஏற்றுமதி

அரியாலை, திங்கள்

87 அந்தர் 67 ருத்தல் கடலட்டையை சிங்கப்பூருக்கு அனுப்பியதினால் 19,600 ரூபாய் வடபகுதி கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சமாஜத்துக்கு கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

குறுகிய மனப்பான்மையை விட்டொழித்து விசாலமான மனமுடையோராக வாழ்வதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும். — விநோபாவே.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegrams; "EELANADU" Jaffna

Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 23ந் திகதி ( 6-4-71)

## பரீட்சைக்குழறுபடி

பரீட்சைப் பகுதி ஆணையாளர் திரு. கே. சி. சுமணசூரியா, 1968—69-ம் ஆண்டுக்கான தமது நிர்வாக அறிக்கையில் பல சுவையான சம்பவங்களை எடுத்துக் காட்டியிருப்பதுடன் சில யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார். பரீட்சைகள் அவசியமா? என இன்று பலரும் கேட்கும் கேள்வியைத் தனது அறிக்கையின் ஆரம்பத்தில் எழுப்பி, ''புலியின் வாலைப் பிடித்தவன் நிலை போல தற்போதைய கல்விமுறையினின்றும் பரீட்சைகளை அகற்ற முடியாதவர்களாகவே நாம் இருக்கிறோம்'' என்று பதிலும் கூறுகிறார். ஆனாலும் ''கல்வியின் தரத்தை மதிப்பிடுவதற்கு நூற்றுக்கு நூறு வீதம் திருப்திகரமான முறையொன்றினை இப்பரீட்சைகளுக்குப் பதிலாக நாம் கண்டுபிடிக்கும்வரை இந் நோயினைக் களைவது இயலாத காரியமாகவே உள்ளது'' என்று அவர் தெரிவித்திருப்பதும் சிந்தனைக்குரியது. பரீட்சைமுறையில் மாற்றம்செய்யவேண்டுமென்பதை நாம் இப் பத்தியில் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். திரு. சுமணசூரியாவும் இதை வலியுறுத்தியிருக்கிறார் பரீட்சைப் பகுதி ஆணையாளரே பரீட்சைமுறையில் மாற்றம்செய்யவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறும் பொழுது கல்விஅமைச்சு இதை அலட்சியம்செய்ய முடியாது.

நேர்மையற்ற செயல்களும் அடக்கமின்மையும் என்ற தலைப்பில் திரு. சுமணசூரியா தமது அறிக்கையில் பரீட்சார்த்திகள் நடந்துகொண்ட ஒழுங்கற்ற சம்பவங்கள் பலவற்றை எடுத்துக் கூறுகிறார். போட்டிப் பரீட்சைகளுக்கும் தேர்ச்சிப் பரீட்சைகளுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகள் முன்னரே ஒழுங்கு செய்யப்பட்டதும் நன்கு திட்டமிடப்பட்டதுமான பெருந்தொகையான நேர்மையற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு முன்னர் எழுதிவைத்த விடைத்தாள்களை இணைத்துவிடல், ஆள்மாருட்டஞ் செய்தல், அடுத்தாற்போல் அமர்ந்துள்ள பரீட்சார்த்தியின்விடைத்தாளைப் பார்த்தெழுதல், பாடக் குறிப்புக்களைப் பார்த்தெழுதல், மண்டபத்துக்கு வெளியிலிருந்து உதவிபெறுதல் போன்ற பத்துக் குற்றங்களை [பத்துக் கற்பனைகளல்ல) அவர் குறிப்பிட்டிருக்கிறார்

இக் குற்றங்களை சாதாரண மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியத் தொழிற் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும் கூட செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் பரீட்சைப்பகுதி ஆணையாளர் குறிப்பிட்டிருக்கிறார் இதேசமயம் 'பெரிய' பாடசாலைகள் என்றழைக்கப்படும் பாடசாலைகளில் கல்வி கற்பவர்கள்தான் இ படி, அவமானமளிக்கும்முறையில் நடந்துகொள்பவர்கள் என்பதற்குத் தக்க சான்றுமுண்டு என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்தக் குற்றங்கள் பற்றிக் குறிப்பிடும் பொது நாட்டின் தரம் இந்த அளவுக்கு இழிநிலைக்கு வந்துவிட்டதே என்ற அவரது கவலையும் அந்த அறிக்கையில் தொனிக்கத்தான் செய்கிறது.

ஆனாலும் ''பரீட்சைகள் நடக்கும் பொழுது மாணவர்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் என்று அவர்களுக்குச் சிறிது காரசாரமாகவே ஆசிரியர்கள் அறிவுரை கூறுவார்களாயின் நாடு நலம்பெறும்'' என்று திரு சுமணசூரியா தெரிவித்திருக்கும் அபிப்பிராயம் சிறிது வேடிக்கையாகத்தோன்றுகிறது. ஆசிரியத்தொழிற் பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளே ''இத்தகைய குற்றங்களைச் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் ஆசிரியர்களின் அறிவுரை எந்த அளவுக்குப் பயன்படும். இது தவிர அறிவுரைகளினால் அதாவது உபதேசங்களினால் இத்தகைய குற்றங்களைத் திருத்திவிட முடியுமானால் நாட்டில் எத்தகைய குற்றச்சம்பவங்களும் நடைபெறுமல் 'பசுவும் புலியும் ஒன்ருக குளத்தில் நீர் அருந்தின' என்று ராமாயணத்தில் கம்பர்கூறணும் ராம ராஜ்யமல்லவா அங்கு நிலவும்!

திரு. சுமண சூரியா தமது அறிக்கையில் தெரிவித்துள்ள இதர பல விஷயங்களைப் பற்றியும் பிறிதோர் சமயம் விவரமாக ஆராயலாம்.

என்ருலும் ''ஒவ்வொரு வகுப்பாக மாணவர்கள் தடையொன்றுமின்றி வகுப்பேற்றப்பட்டுக் கொண்டுபோவதாலும், ஒவ்வொரு வகுப்பிலும் அதற்குரிய பாடங்களை சீர்ஒழுங்குமுறையிற்படிக்காது செல்வதினாலும் இவர்கள் அடிப்படைத் தத்துவங்களை நன்கு அறியாதவர்களாகவே திகழ்கின்றனர்'' என்று திரு. சுமணசூரியா கூறுவது கவனத்திற்கொள்ள வேண்டிய விஷயம்

கல்வித்துறையில் இதுவும் ஒரு புதுமை'' என்று கருதியோ, இடநெருக்கடியைத் தீர்க்கலாமென கருதியோ மாணவர்கள் தகுதி பார்க்கப்படாமல் வகுப்பேற்றப்படும்முறை கொண்டுவரப்பட்டது. தகுதியில்லாத மாணவர்கள் பரீட்சை ஆலாகா நடத்தும் இறுதிப் பரீட்சையில் சித்திபெறுவதற்கு பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்ட குற்றங்களைச் செய்ய முனையாமல் அதிர்ஷ்டத்தை நம்பியிருக்கமுடியும்?

இதேசமயம் பரீட்சைப் பகுதியினர் பரீட்சை நடத்துகிறுர்கள் மாணவர்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த பரீட்சைகளுக்கும் எந்த அளவில் என்ன விதத்தில் சம்பந்தம் இருக்கிறது.

கல்வி அமைச்சும் அரசும் இவைபற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஆசிரியருக்கு கடிதங்கள்

கடந்த 10 ஆண்டாக கொழும்புத்துறை மேற்குப்பகுதிக்கு

## 5,000 ரூபா செலவு செய்யப்பட்டிருக்கும் என்பதே கேள்விக்குறியாகும்

28-3-71 திகதியில் நடைபெற்ற யாழ். மாநகரசபை கூட்டத்தில் 50,000 ரூபா சுவாமியார் வீதியில் செலவு செய்யப்பட்டிருப்பதாக 'ஈழநாடு' பத்திரிகையில் வாசித்து மிக்க அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளோம் ஏனெனில் கடந்த பத்து வருடங்களாக கொழும்புத்துறை மேற்கில் முழுவதுமாக 5,000 ரூபா செலவு செய்யப்பட்டிருக்கும் என்பதே ஒரு கேள்விக் குறியாகும். யாழ்ப்பாணத்தின் மற்ற வட்டாரங்களிலும் பார்க்க எமது வட்டாரமாகிய கொழும்புத்துறை சிறிய வட்டாரமாகும். இச் சிறிய வட்டாரத்தில் மாநகரசபை முதல்வர் குறிப்பிட்ட 87,000 ரூபா செலவு செய்யப்பட்டிருப்பின் வரவேற்கத்தக்கதே. ஆனல் குறிப்பிட்டபடி 50,000 ரூபா சுவாமியார் வீதியிலோ அல்லது கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த எந்தப் பகுதியிலோ செலவழிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடனும் மிக உறுதியுடனும் கூறுகின்றோம்

உதாரணமாக கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த கந்தர் மணியம் வீதிக்கு மின் விநியோகம் அளிக்கும்படி பலமுறைகளில் பல தரப்பினர்களினுலும் விணயத்துடன் வேண்டப்பெற்றும் இதுவரை அதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை அத்துடன் கொழும்புத்துறை மேற்கு யோக சுவாமிகளின் அருளினுல் மிகப் பிரபல்யமடைந்தது இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்தது மல்லாமல் உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து தரிசனம் செய்யும் புனித இடமாகும் இச்சமயங்களில் வெளிநாட்டவர் வந்து இவ்விடத்தின் சிர்கேட்டினை எடுத்துக் காட்டி வருத்தம் அடைந்ததை நாம் அறிவோம்.

இது இவ்வாறு இருக்க யாழ் நகர முதல்வர் மேற்படி விடுத்த அறிக்கை முரணுகவும் கருத்தற்றதாகவும் அமைந்திருப்பதால் நாம் இதனை ஆராய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதுமட்டுமன்றி இப் பகுதி மக்கள் இதில் ஏதோ சூழ்ச்சிகள் நடப்பதாக அங்கலாய்க்கின்றனர்.

ஆகவே மாநகரசபை ஆணையாளர் அல்லது முதல்வர் இதற்கான தகுந்த பதிலை அளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கொழும்புத்துறை
மேற்கு
வரியிறுப்பாளர்கள்.

4-4-71.

87,000 ரூபா செலவுசெய்தது

## உண்மைஎன. மேயர் நிருபித்தால் பதவியை ராஜினுமா செய்வேன்

— தம்புகந்தையா

மாநகரசபை முதல்வர் திரு. தா. ச. துரைராஜா மீது 28-3-71ல் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தில் முதல்வர் 87,000 ரூபா கொழும்புத்துறை வட்டாரத்திற்கு செலவு செய்ததாக கூறியதாக 30-3-71ம் தேதி 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இக்கூற்று முற்றும் உண்மைக்குப் புறம்பானது மல்லாமல் முழு அபாண்டமானது.

இக்கருத்தினுல் எனது கொழும்புத்துறை வட்டார மக்கள் உண்மை நிலையை அறிய பெரிதும் விரும்புகின்றனர். ஆகவே உண்மையை தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகின்றது.

கடந்த 70-ம் வருடத்தில் மொத்தமாக வீதி, மின்சாரம், தண்ணீர் ஆகிய அபிவிருத்தி வேலைகளுக்குமாக பார்த்தாலும் மேற்படி 87,000த்தையும் எட்டிப் பிடிக்க முடியாது. இந்நிலையில் சுவாமியார் வீதிக்கு மட்டும் 50,000 ரூபாவும் ஆனந்தன்வடலி வீதிக்கு 17,000 ரூபாவும் செலவு செய்யப்பட்டதாக முதல்வர் தெரிவித்திருந்தால் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான பொய்க் கூற்ருகும். இதை முற்ருக நான் மறுக்கிறேன்.

இவ்விடயம் உண்மை என்று முதல்வர் கூறுவாராஞல் நிருபிப்பாராஞல் எமது உறுப்பினர் பதவியை உடன் ராஜினுமா செய்வேன். உண்மையில் சுவாமியார் வீதிக்கு 350 அடி தூரத்தில் 1 ஸ்ரான் பைப் போடப்பட்டது. ஆனந்தன் வடலி வீதிக்கு 3 ஸ்ரான் பைப் போடப்பட்டது. ஆசியர் வீதிக்கு 1 ஸ்ரான்பைப் போடப்பட்டது. எனது வேண்டுதலில் மேற்படி வேலைகளில் அரைவாசியே செய்யப்பட்டன. இதுதான் உண்மை. மின்சார விருத்தியில் வில்வம்தெரு லேனும் கொழும்புத்துறை வீதி மின் கம்பிகள் வலுப்படுத்தலுமே நடைபெற்றன. சென்மேரிஸ் லேன் வேலை இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீசிகளின் மின் விஸ்தரிப்புகள் செய்யப்படவில்லை. ஆகவே மீண்டும் தெரிவிப்பது யாதெனில் 87,700 ரூபா செலவு செய்யப்பட்டது என்று முதல்வர் உண்மையில்கூறியதாக எனக்குத் தெரியவில்லை.

திரு தம்புகந்தையா
(கொழும்புத்துறை வட்டார உறுப்பினர்)

வடமராட்சியில்

## கூட்டுறவு விவசாயத்தில் இளைஞர் ஈடுபடுவர்

உடுப்பிட்டி, திங்கள்

விவசாயத் தொழிலே மனித சமுதாயத்தின் ஜீவநாடி. படித்த வாலிபர்கள் விவசாயம் செய்ய வெட்கப் படக்கூடாது. உணவுற்பத்தியிலீடுபடுவதால்தான் நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும். இத்தகைய இயக்கங்கள் மூலம் வாலிபர்களை கிராமமுன்னேற்றத்தில் ஈடுபடுத்திப் பல பயனுள்ள திட்டங்களைச் செயற்படுத்த முடியும். எமது பணிகளுக்கு உதவ அரசாங்கம் காத்திருக்கிறது.'

மேற்கண்டவாறு வடமராட்சி தெற்கு காரியாதிகாரி பிரிவு உத்தியோகத்தர் திரு. செ. சுவாமிநாதன் கரணவாய்-கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் பேசும்பொழுது சிரமதானம் ஒரு புனிதமான பணி என்றும் இப் பணியைச் செய்யும்போது பிரதிபலன் கருதக்கூடாது என்றும் சொன்ஞர்.

இவ்வியக்க வாலிபர்களைக் கூட்டுறவு முறையிலான விவசாயத்திலீடுபடுத்துவதென்றும் இதற்கு முன்னேடியாக அடுத்த வாரம் வெங்காயப் பயிர்ச்செய்கையிலீடுபடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கெனத் திருவாளர்கள் செ திருஞானசுந்தரம், இ செல்வநாதன், கு பாலகிருஷ்ணன் ஆகிய மூவரடங்கிய விவசாயக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

## ஒருமைப்பாடு உணர்வு வேண்டும்

உடுப்பிட்டி, திங்கள்

நாம் இலங்கை மாதாவின் வயிற்றில் பிறந்தவர்கள் எல்லோரும் சகோதரர்களே எமக்குள் இன மத பேதமின்றி வாழவேண்டும் எமக்குள்ள பொறுப்புக்களையுணர்ந்து நம் நாட்டுப் பிரச்சினைகளை நாமே தீர்க்க முயலவேண்டும். போட்டி பொருமைக்கு இடம் கொடாது தமிழ்- சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமென கரவெட்டி கம்யூனிஸ்ட் வாலியர் சங்கத்தைச் சேர்ந்த திரு சி. சத்தியேஸ்வரன் அனுராதபுரத்திலிருந்து வடபகுதிக்கு விஜயம் செய்த சிங்கள வாலிபர்கள் மத்தியில் பேசுகையில் கூறிஞர்.

## விமானத்தில் பிரயாணி மரணம்

கட்டுநாயகா, திங்கள்

லண்டனிலிருந்து சிட்னிக்குப் போகும் விமானத்தில் 69 வயதுடைய பிரயாணி ஒருவர் மரணமாஞர். விமானம் டெஹ்ரானிலிருந்து கொழும்புநோக்கி வருகையில் இம் மரணம் சம்பவித்துள்ளது. இதுபற்றி விசாரணை நடத்தப்படும் என தெரியவருகிறது.

## தேரு[...] 1-ம் எ[...] மாவை [...] பொலிஸ்[...]

மாவிட்டபுரம், திங்க[...]
"சம்பவதினம் மாவிட்[...]
புரம் கந்தன் ஆலயத்தி[...]
கடமையாற்றினேன். தே[...]
எரிந்தசமயம் சனங்கள் அ[...]
குரலுடன் சத்தம் போட்[...]
னர். அச்சமயம் வடக்கு வீ[...]
யால் 1-ம், 2ம் எதிரிகள் ஓ[...]
ஞர்கள். அவர்களை மக்க[...]
துரத்தினுர்கள்.

இவ்வாறு மாவை ஆல[...]
தேர் தீவைப்பு வழக்கி[...]
சாட்சியமளித்த காங்கேச[...]
துறைப் பொலிஸ் நிலைய இ[...]
கசியப் பிரிவைச் சேர்ந்[...]
திரு எஸ். பாசேந்திர[...]
கூறிஞர்.

மல்லாகம் நீதிபதி எ[...]
ஆனந்தகுமாரசாமி மு[...]
னிலையில் இவ்வழக்கு நேற்[...]
விசாரணைக்கு எடுத்து[...]
கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மாவிட்[...]
புரம் ஆலயத்தின் இரு தே[...]
களை தீ[...]டு நஷ்டம்[...]
வித்ததாகவும் சண்முகவ[...]
வேல், பொன்னுச்சாமிஐய[...]
ஆகியோரைக் காயப்படுத்[...]
யதாகவும் எஸ் ரி என் நா[...]
ரத்தினம், எஸ் மகேஸ்வர[...]
என் இராசையா ஆகியோ[...]
மீது குற்றம்சாட்டப்பட்டு[...]
ளது.

திரு. பாசேந்திரன் தமது[...]
சாட்சியத்தில் மேலும் தெ[...]
வித்ததாவது: மக்களில்சில[...]
தேரில் ஏறி தீயை அணைத்[...]
னர் சிலர் தேரில் இருந்[...]
ஓலை[...] அறுத்தார்க[...]
சிலர் தண்ணீர் எற்றி தீ[...]
அணைத்தார்கள். 2 தேர்க[...]
எரிந்துகொண்டிருந்த ச[...]
யம் 1ம் எதிரி தேரடியி[...]
நின்று ஓடுவதைக்கண்டே[...]
நான் சிவில் உடுப்பில் நின்[...]
தால் அவரைப்பிடிக்கவில்[...]
இதில் சம்பந்தப்பட்ட கா[...]
[...] யார் தூ[...]
நின்றது. சார்ச் சார[...]
3ம் எதிரியை நான் கா[...]
வில்லை. இச்சம்பவம் குறித்[...]
மாவிட்டபுரம் தற்காலி[...]
பொலிஸ்நிலையத்தில் தகவ[...]
கொடுத்தேன். இன்ஸ்பெ[...]
டர் கணேசன் பொறுப்பி[...]
பொலிஸ் குழு ஸ்தலத்துக்[...]
வந்தது. அப்போது அவர்[...]
ளுக்கு இதுபற்றிக்கூறினே[...]
குறிப்பும்எழுதினேன் அன்[...]
நான் மட்டும்தான் அங்[...]
நின்றேன் சப்இன்ஸ்பெக்ட[...]
பெர்ஞண்டோ பின்பு வந்[...]
தும் அவரிடம் சம்பவத்தை[...]
கூறினேன்.

திரு பாசேந்திரனை 1[...]
எதிரி சார்பில் ஆஜரா[...]
அட்வகேட் ஆர் ஈ தம்[...]
ரத்தினம் குறுக்கு விசாரணை[...]
செய்தார்.

வழ: தேர் எரியும் சமய[...]
எங்கே நின்றீர்? சாட்சி[...]
கோவில் வாசல் பக்கத்தி[...]
வழ: எவ்வளவு தூரத்தி[...]
நின்றீர்? சாட்சி- தேரடியி[...]
இருந்து 15 யார் இருக்கு[...]
வழ: நீர் அங்கு நின்[...]
போது தேரைத்தான்கவனி[...]
துக்கொண்டிருந்தீரா? சாட்[...]
நெருப்பைக் கண்டவுட[...]
பார்த்தேன்.
வழ: முதலாம் எதிரிை[...]
அங்கு எப்போது கண்ட[...]
சாட்சி- காலை 9-30 மணிக்[...]
வழ: வேறு யாருடன் வ[...]
திருந்தார்? சாட்சி- 50, [...]
ஹரிஜனங்களுடன் வந்[...]
நின்றார்.
வழ: அவர்கள் ஹரிஜன[...]
என்று எப்படித்தெரியு[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தருக்கு 3 அடி தூரத்தில் ...எதிரி ஓடுவதைக் கண்டேன்

## ...தேர் எரிப்பு வழக்கில் இரகசியப் ...லிஸ் உத்தியோகஸ்தர் சாட்சியம்

...ம், திங்கள்
...மாவிட்ட
...ஆலயத்தில்
...ன். தேர்
...ங்கள் அழு
...ம் போட்ட
...வடக்கு வீதி
...திரிகள் ஓடி
...ன மக்கள்

...வை ஆலய
...வழக்கில்
...காங்கேசன்
...நிலைய இர
...சேர்ந்த
...ரசேந்திரன்

...பதி எஸ்.
...மி முன்
...க்கு நேற்று
...எடுத்துக்
...

...மாவிட்ட
...இரு தேர்
...ட்டம்...னை
...ண்முகவடி
...சாமி ஐயர்
...பப்படுத்தி
...என் நாக
...கேஸ்வரன்
...ஆகியோர்
...ப்பட்டுள்

...ரன் தமது
...லும் தெரி
...களில் சிலர்
...அணைத்த
...இருந்து
...த்தார்கள்.
...ற்றி தீயை
...2 தேர்கள்
...ந்த சம
...தேரடியில்
...கண்டேன்
...யில் நின்ற
...டிக்கவில்லை
...ட்ட கார்
...தூ...தில்
...ாரதியான
...ன் காண
...ம் குறித்து
...தற்காலிக
...ல் தகவல்
...இன்ஸ்பெக்
...பொறுப்பில்
...த்துக்கு
...து அவர்க
...கூறினேன்
...ன் அன்று
...ன் அங்கு
...ஸ்பெக்டர்
...ன்பு வந்த
...பவத்தைக்

...ரனை 1ம்
...ஆஜரான
...தம்பி
...விசாரணை

...ம் சமயம்
...சாட்சி-
...பக்கத்தில்.
...தூரத்தில்
...தேரடியில்
...இருக்கும்.
...கு நின்ற
...ன்கவனித்
...ரா? சாட்சி
...ண்டவுடன்

...எதிரியை
...கண்டீர்?
...மணிக்கு.
...டன் வந்
...- 50, 60
...வந்து

...ஹரிஜனர்
...தெரியும்?

...சம்பவித்
...றி விசா
...ம் எனத்

சாட்சி- முதலாம் எதிரியுடன் நின்ற சிலர் ஹரிஜனர் என்று தெரியும். அவர்களுடன் நின்றதால் மற்றவர்களும் ஹரிஜனர்கள் என நினைத்தேன்.

வழ: இவர்கள் எங்கே நின்றனர்? சாட்சி- மண்டபத்துக்கு முன் நின்றனர்.

வழ: முதலாம் எதிரியைப் பின்பு எப்போது கண்டீர்? சாட்சி- 11-30 மணியளவில் தேரடியில் கண்டேன்.

வழ: நீர் ஏன் அங்கு நின்றீர்? சாட்சி- நாசவேலைகள் செய்வதைப் பார்க்க நின்றேன்.

வழ: இப்படித்தான் உமக்கு உத்தரவா?- ஆம் இப்படியான செயல் நடக்கும் என தகவல் கிடைத்ததால் ஏ எஸ் பி.யின் உத்தரவுப்படி நின்றேன்.

வழ: 1ம் எதிரியைப்பின்பு எப்போது கண்டீர்? சாட்சி- தேர் எரிந்துகொண்டிருக்கும் சமயம்-

வழ: நீர் ஏன் 1ம் எதிரியைக் கவனித்தீர்? சாட்சி- தீவிர வாதிகளைக் கவனிப்பது எனது கடமை.

வழ: சம்பவம் நடைபெற்றபோதுதான் இங்கு நின்றீரா அல்லது முன்பும் நின்றீரா? சாட்சி- சம்பவம் நடப்பதற்கு அரை மணித்தியாலத்துக்முன் தொடக்கம் நின்றேன்

வழ: அப்போதும் எதிரிகளைக்கண்டீரா? சாட்சி- ஆம்.

வழ: தேரை நோக்கி இவர்கள் சென்றதைக் கண்டீரா? சாட்சி- காணவில்லை

வழ: தேரடியில் இவருடன் வேறு யார் நின்றனர்? சாட்சி- பலர் நின்றனர்.

வழ: சம்பவதினத்துக்கு முன் 1ம் எதிரியைத் தெரியுமா? சாட்சி- தீண்டாமை ஒழிப்பில் ஈடுபாடு கொண்டவர் ஆதலால் அவரைத் தெரியும்.

வழ: சம்பவதினம் இவர்களை ஏன் கவனித்தீர்? சாட்சி- அன்று இவர்கள் கரைச்சல் வரும் என்று தெரிந்ததால் கவனித்தேன்.

வழ: முதலாம் எதிரி ஆலயத்துக்கு ஏன் வந்தார் என்பது தெரியுமா? சாட்சி- தரிசிக்கவந்தார் என நினைத்தேன்.

வழ: இவர்கள் கரைச்சல் கொடுத்தார்களா. சாட்சி- அமைதியாகத்தான் நின்றார்கள்.

வழ: யார் தூரத்தியதை கண்டீர்? சாட்சி: பக்தர்கள் துரத்தியதைத்தான் கண்டேன்.

வழ: எத்தனைதேர் எரிந்ததைக் கண்டீர்? சாட்சி: இரு தேர்கள்.

வழ: பெரிய தேர் முழுவதும் எரிந்ததைக் கண்டீரா? சாட்சி: மேற்பக்கம் எரிவதைக் கண்டேன்.

வழ: கீழ்ப்பகுதி சேதமடைந்ததைக் கண்டீரா? சாட்சி: சேதம் பற்றிக் கிட்டப்போய்ப்பார்க்கவில்லை.

வழ: எவ்வளவு நேரம் இங்கு கடமையாற்றினீர்? காலைமுதல் மாலைவரை.

வழ: பொலிஸ் அதிபர் விசாரணைக்கு வந்தபோதும் சாட்சியம் அளித்தீரா? சாட்சி: சம்பவம் பற்றிக் கூறினேன்.

வழ: முதல் யார் விசாரணைக்கு வந்ததை கண்டீர் சாட்சி: இன்ஸ்பெக்டர் கணேசனைக் கண்டேன்

வழ: அவரிடம் குறிப்புப் புத்தகத்தை காட்டினீரா? சாட்சி புத்தகத்தைக் காட்டவும் இல்லை அவர் கேட்கவுமில்லை.

வழ: இன்ஸ்பெக்டர் கணேசன் எப்போது வந்தார்? சாட்சி: நான் பொலிசில்தகவல் கொடுத்து 5 அல்லது 10 நிமிடத்தில் வந்தார்.

வழ. அவ்வளவு நேரமும் என்ன செய்தீர்? சாட்சி: அங்கேயே நின்றேன்.

வழ: தேர் எரியும் போது சம்பவம் பற்றி குறிப்பு எழுதினீரா? சாட்சி இல்லை.

வழ: ஏன் எழுதவில்லை? சாட்சி: அப்போது கொந்தளிப்பாக இருந்ததாலும் ஆட்கள் நின்றபடியாலும் எழுதவில்லை, அத்துடன் நான் இரகசிய பொலிஸ் என்பதை வெளிக்காட்டாமல் இருப்பதற்காக.

வழ: எப்போது எழுதினீர்? சாட்சி: சம்பவத்தின் பின் ஒரு மணித்தியாலத்தால்.

வழ: இன்ஸ்பெக்டர் கணேசனிடம் கார் இலக்க குறிப்புக் கடதாசியை கொடுக்காது எப்படிச் சொன்னீர்? சாட்சி: மனப்பாடமாக இருந்ததால்.

வழ: சப் இன்ஸ்பெக்டர் பெர்ணண்டோவை எப்போது கண்டீர்? சாட்சி: மாலை 3-20 மணிக்கு கோவிலடியில் கண்டேன். அவர் எனது புத்தகத்தில் ஒப்பம் இட்டுள்ளார்.

வழ: நெருப்பு அணைக்க எவ்வளவு நேர சென்றது? சாட்சி: அரை மணித்தியாலம் சென்றிருக்கும்.

வழ: அப்போது அங்கே நின்றீரா? சாட்சி: ஆம்.

வழ: பின் என்ன செய்தீர்? சாட்சி: இராமசேவையாளரின் கந்தோருக்குச் சென்றேன்.

வழ: இந்துமதியைத் தெரியுமா? சாட்சி: தெரியாது.

வழ: தேர்தல் காலத்தில் எங்கே வேலை செய்தீர்? சாட்சி: காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில்.

வழ: அப்போது உமது கடமை என்ன? சாட்சி: அரசியல் கூட்டங்களைக் கவனிப்பது.

வழ: சுந்தரலிங்கத்தின் கூட்டத்துக்கும் போனீரா? சாட்சி: ஞாபகமில்லை.

வழ: அக் கூட்டத்தில் நாடகம் நடந்தது தெரியுமா? சாட்சி; ஞாபகமில்லை பலரும் இங்கு என்னுடன்வேலை செய்ததால் யார் யார் எந்தக் கூட்டத்துக்கு போனது என்று புத்தகத்தைத்தான் பார்க்கவேண்டும்.

வழ: சண்முகவடிவேலுவைத் தெரியுமா? சாட்சி: தெரியாது.

வழ: சுந்தரலிங்கத்தைத் தெரியுமா? சாட்சி: தெரியும்.

வழ: நெருப்பு வைத்த சமயம் அவரைக் கண்டீரா? சாட்சி: கவனிக்கவில்லை.

பின்னர் சாட்சியை வழக்கறிஞர் ஆர் ஜே செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார்

செல்வ: 3ம் முறை 1ம், 2ம் எதிரிகளை தேரடியில் கண்ட போது இவர்களுடன் எத்தனை பேர் நின்ற...

10பேர் வரையில் நின்றனர்

செல்வ: 1ம் எதிரி ஓடும் போது அவரை யாரும் அடித்ததைக் கண்டீரா? சாட்சி. காணவில்லை.

வழ. பொன்னுச் சாமியுடன் 1ம் எதிரி சண்டை பிடித்ததை கண்டீரா? சாட்சி: இல்லை.

செல்வ: 2ம் எதிரி ஓடும் போது எவ்வளவு தூரத்தில் கண்டீர்? சாட்சி: 50 யார் தூரத்தில்.

செல்வ: 1ம் எதிரி என்ன உடையுடன் நின்றார்? சாட்சி: பட்டு வேட்டியுடன் நின்றார்.

செல்வ: 2ம் எதிரி என்ன உடையுடன் நின்றார்? சாட்சி: நூல் வேட்டியுடன்.

வழ: சம்பவம் பற்றி, சம்பவம் நடைபெற்ற சமயம் குறிப்பு எடுத்தீரா? சாட்சி: இல்லை கார் நம்பரைக் கடதாசியில் எழுதி வைத்திருந்தேன்.

வழ: ரகிதத்தில் எழுதியது என்பது பொய்? சாட்சி: அதை நான் வன்மையாக மறுக்கிறேன்.

### "குறிப்புப்புத்தகத்தில் சம்பவத்தை உடன் எழுதவில்லை"

### இன்ஸ்பெக்டர் குறுக்குவிசாரணை

இதையடுத்து இன்ஸ்பெக்டர் செல்லையா இவரை குறுக்கு விசாரணை செய்தார்.

இன்ஸ்: சம்பவ தினம் எத்தனை பேர் இங்கு நின்றனர்? சாட்சி: சுமார் 800 பேர்.

இன்ஸ்: 1ம் எதிரியுடன் எத்தனை பேர் ஓடினார்கள்? சாட்சி: அவருடன் 25 பேர் ஓடினார்கள்.

அடுத்து சப் இன்ஸ்பெக்டர் திரு பெர்ணண்டோ சாட்சியமளித்தார் அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

சம்பவதினம் 1மணி யளவில் துரைச்சாமிக் குருக்கள் இந்துமதி, செல்லப்பா சண்முகவடிவேல், கந்தையா பொன்னிச்சாமி ஆகியோரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தேன். 3 மணியளவில் ஸ்தலத்துக்குச் சென்று நடந்தவற்றைப் பதிவுசெய்தேன். 3 மணியளவில் ஸ்தலத்துக்குச் சென்று நடந்தவற்றைப் பார்வையிட்டேன். பின்பு இது சம்பந்தமாக ஒரு உடைந்த போத்தல், தீப்பெட்டி ஆகியவற்றைப் பெற்றேன் யாழ் ஆஸ்பத்திரியிலும். சுன்னாகம் பஸ்நிலையத்திலும் எதிரிகளைத் தேடினேன் உடைந்த போத்தல் தீப்பெட்டி முதலியவற்றை திரு பெர்ணண்டோ கோர்ட்டில் சமர்ப்பித்தார்.

ஆலய தரப்பில் திரு சுந்தரலிங்கம் பிரிவுக்கவுன்சில் வழக்குக்காக லண்டன் சென்றுள்ளதால் வழக்கறிஞர் திரு. உலகநாதன் ஆஜராகி இருந்தார். பொலிஸ் தரப்பில் திரு எஸ். செல்லையா ஆஜராகி வழக்கை நடத்தினார்

---

### சிவபாலயோகி விஜயம்

யாழ்ப்பாணம், செவ்வாய் நல்லை ஆதீனத்திற்கு ஸ்ரீ ல ஸ்ரீ சிவபாலயோகி ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்...

---

சர்வோதய சமாதான பல்கலைக்கழகம்

# யாழ். இந்து சாரணர் 5 நாள் சிரமதானம்

யாழ்ப்பாணம், செவ்வாய் அக்கராயன்குளம காந்திக்கிராமத்தில் அமையவிருக்கும் சர்வோதய சமாதான பல்கலைக்கழகத்தின் சில ஆரம்ப வேலைகளையாழ். இந்துக்கல்லூரி சாரணர்கள் சிரமதான மூலம்நிறைவேற்றவுள்ளனர். இன்றுதொடக்கம் இம்மாதம் 10ந் திகதி வரை இச்சாரணர்கள் சிரமதானவேலைகளை மேற்கொள்வர்.

வாய்க்கால் அமைத்தல் நிலம் துப்புரவு செய்தல் மற்றும் மட்டுப்படுத்தல் முதலிய பணிகளைச் சிரமதானிகள் இந்த ஐந்துதினங்களிலும் செய்து முடிப்பர் ஓய்வு நேரங்களை கூத்தரங்கு சொற்பொழிவு முதலியவற்றில் சிரமதானிகள் செலவழிப்பர். இந்தக் கல்லூரிச் சாரண ஆசிரியர்களான திரு. எஸ். நல்லையா திரு. வி எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் சிரமதான முகாமைவழிநடத்துவர்

---

### பென்சன் தாமதம் தவிர்க்கப்படும்

கோட்டை, திங்கள் ஆசிரியர் உட்பட அரசாங்கசேவையில் இருந்து இளைப்பாறுபவர்களுக்குத் தாமதமின்றிப் பென்சன் கிடைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைப் பென்சன் இலாகாடைரக்டர் திருஎல். பனம்பலன செய்துள்ளார். 1970ம் ஆண்டுஜூன்மாதத்திலிருந்து ஓய்வு பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதினால் இருபது கோடியே ஐம்பது லட்சம் தேவைப்படுகிறதென அவர் தெரிவித்தார்.

---

### மற்றொரு புதிய அலுவலகம்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாண மாநகரசபையினருக்கு மற்றொரு புதிய அலுவலகத்தை கட்டுவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இக்கட்டிடத்திற்கான அத்திபாரக்கல் மாநகரசபை முதல்வர் திரு. ரி எஸ். துரைராஜாவினால் நாட்டப்பட்டது. மேயர் திரு. ரி. எஸ் துரைராசாவினால் அத்திபாரக்கல் நாட்டப்பட்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய அலுவலகத்தை அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா கடந்த மாதம் திறந்துவைத்தார். தற்பொழுது இந்த புதிய கட்டிடத்தில் அலுவலக வேலைகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 1 லட்சம் ரூபா செலவில் இக்கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிடத்திற்கு அருகில் தான் மற்றொரு புதிய அலுவலகத்திற்கான அத்திபாரக்கல் நாட்டப்பட்டது.

---

### கல்வித்திட்டத்தில் மாற்றம் வரும்

கோட்டை, திங்கள் நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரத்தை அனுசரித்து சமூக சோஷலிச அடிப்படைகளில் மாணவர்களைப் பயிற்றுவிக்க ஏற்ற முறையில் புதிய கல்வித்திட்டம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது ஜூன் மாதமளவில் சமர்ப்பிக்கப்படவுள்ள தேசிய கல்வித் திட்ட மசோதாவில் க பொ த. (சாதாரணம்) தரப் பரீட்சை மாற்றி அமைக்கப்படவுள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகட்கு 8-ம் வகுப்பு வரை கட்டாயமாகக் கல்வி புகட்டவேண்டும் எனவும், 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கென அரசாங்கம் "மொண்டிசரி" பாடசாலைகளை நடாத்தவுள்ளது எனவும் தெரியவருகிறது.

இப்புதுத் திட்டம் கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் வகுக்கப்பட்டு வருகிறது.

---

### சுருட்டுத்தொழிலை யந்திரமயமாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். இயந்திர சாதனமூலம் சுருட்டை உற்பத்தி செய்ய உதவும்படி சுருட்டுத் தொழிலாளர் கேட்டுள்ளனர்.

இவ்வாறு திரு. ஹெக்டர் அபயவர்த்தன தலைமையில் இங்கு வந்த கைத்தொழில் ஆலோசனை குழுவிடம் கேட்டுள்ளதாகத் தெரிய வருகிறது இக்குழு சுருட்டை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்வது மற்றியும் வேண்டிய புகையிலையை இலங்கையிலேயே பெறமுடியுமா என்பதுபற்றியும் ஆராய்ந்தது. இக்குழுவிடம் சுருட்டு உற்பத்தியாளர்கள் சுருட்டுத் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கூட்டுறவு முறையில் இயந்திரசாதனங்களினால் சுருட்டை உற்பத்தி செய்ய உதவும்படி இவர்கள் கேட்டுள்ளார்கள் என நம்பப்படுகிறது

---

## கூப்பன் புத்தக மோசடிக்கான தண்டனை அதிகரிக்கும்

கோட்டை, திங்கள் சட்டவிரோதமாக கூப்பன் புத்தகம் வைத்திருப்பவர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டத்தை மேலும் கடுமையாக்குவதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருப்பதாக அறியப்படுகிறது

இதன்படி சட்டவிரோதமாக அரிசிப்புத்தகங்களை வைத்திருப்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை ரூபா 10 ஆயிரம் வரை உயர்த்தவும் சிறைத்தண்டனையை ஒருவருடம் வரை நீடிக்கவும் சட்டத்தில் வழி செய்யப்படுமென்று அறியப்படுகிறது.

வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின இது சம்பந்தமாக ஓர் அறிக்கையை விரைவில் மந்திரி சபையின் பரிசிலனைக்குச் சமர்ப்பிக்கவிருக்கிறார்

இப்பொழுதிருக்கும் சட்டப்படி சட்டவிரோதமாக அரிசிப் புத்தகம் வைத்திருந்தால் அல்லது பாவித்தால் அதிக பட்சம் ரூபா 500 அபராதம் அல்லது இரு தண்டனைகளுமே விதிக்கப் படலாம்.

புதிய சட்டப்படி ரூ. 500, ரூபா 10 ஆயிரமாகவும், ஆறு மாதம் ஒரு வருடமாகவும் அதிகரிக்கப்படும் என்று தெரிகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாசேந்திரனின் சாட்சியத்தை முற்றாக நம்பவேண்டும்"

## பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்கில் சத்தியேந்திரா வாதம்

கொழும்பு, திங்கள்

**பருத்தித்துறைத் தேர்தல் ஆட்சேப வழக்ககில் முதலாவது எதிர் மனுதாரான திரு கே. துரைரத்தினத்தின் வழக்கறிஞர் திரு என். சத்தியேந்திரா நேற்றுடன் தனது தொகுப்புரையை முடித்துக் கொண்டார்.**

**இன்று மனுதாரின் வழக்கறிஞரான திரு கே. சி. நடராசா தொகுப்புரை நிகழ்த்துவார்.**

**அதன் பின்னர் இரண்டாவது எதிர் மனுதாரான செல்வி மனோரமாவின் வழக்கறிஞர் திரு செ. சந்திரகாசன்தொகுப்புரை நிகழ்த்தவிருக்கிறார்.**

பருத்தித்துறைத் தேர்தல் ஆட்சேபமனு மீதான விசாரணை நீதியரசர் திரு எஸ். ஆர். விஜயதிலகா முன்னிலையில் நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமானபோது முதலாவது எதிர் மனுதாரான திரு கே. துரைரத்தினத்தின் வழக்குரைஞரான திரு என். சத்தியேந்திரா இரண்டாம் நாளாகத் தொடர்ந்து தனது தொகுப்புரையை நிகழ்த்தினார்.

திரு என். சத்தியேந்திரா தனது தொகுப்புரையில் கூறியதாவது:

துரைசாமியின் சாட்சியம் நம்பும்படியாக இல்லை. வசதிக்காக அமர்த்தப்பட்ட சாட்சியாகவே துரைசாமி இருக்கிறாரேயொழிய உண்மையைக் கூறுபவராக இல்லை. மனோரமா ஒற்றைச் சடையா இரட்டைச் சடையா பின்னியிருந்தார்? கூந்தலில் மலர் வைத்திருந்தாரா இல்லையா? அவர் போட்டிருந்த சட்டையின் நிறம் மஞ்சளா வெள்ளையா? அல்லது வெளிறிய மஞ்சளா என்ற இன்னோரன்ன நுண்ணிய விபரங்களையெல்லாம் பற்றி தங்குதடையின்றி அவர் நினைத்தபடி கூறியதிலிருந்தே அவர் உண்மையைப் பேசவில்லை; ஊர் அப்புக்காத்து என்ற அனுபவ ரீதியாக கேட்ட கேள்விகளுக்கு தக்கபடி சமயோசிதமாகப் பதில் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

சாதாரணமாக எந்தச் சாட்சியும் எந்தநபரும் கூட்டத்தில் பேசுகின்ற பெண் ஒற்றைச் சடைபோட்டிருந்தாரா இரட்டைச் சடை போட்டிருந்தாரா? கூந்தலில் மலர் வைத்திருந்தாரா இல்லையா என்ற தேவையற்ற விபரங்களையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்டிருக்க மாட்டார். அப்படியிருக்க துரைசாமி மட்டும் இவற்றையெல்லாம் தெட்டத்தெளிவாகக் கூறியதிலிருந்து அவர் உண்மையைப் பேசவில்லை என்பதை காட்டிட உதவுகிறது.

செல்வி மனோரமா பேச வந்தபோது முதலாவது எதிர் மனுதாரான துரைரத்தினம் ஒலிவாங்கியின் உயரத்தைக் குறைத்ததாக கூறியது. பேச்சுத் தொடங்கியபோது பார்த்துப் பேசுமாறு கூறியதாகச் சொல்வது மனோரமாபேசி முடிந்தபின் மேடையைவிட்டு இறங்க உதவியதாகக் கூறியது எல்லாமே துரைரத்தினத்தை எப்படியாவது இந்த விஷயத்தோடு தொடர்புபடுத்திவிட வேண்டும் என்ற திட்டத்தின் பேரிலேதான் சொல்லப்பட்ட சாட்சியம் என்பது எனது வாதமாகும்.

திருநாவுக்கரசுவும் துரைசாமியும் ஆரம்பம் முதல் இந்த வழக்கினைத் தயாரிப்பதில் ஒன்றுபட்ட முயற்சியில் ஈடுபட்டவர்கள். ஆனால். இங்கே நீதிமன்றத்தினுள் வந்து ஏதோ இரண்டு பேரும் தற்செயலாகச் சந்தித்தவர்களைப் போலவும் சுயேட்சையாக சாட்சியமளிப்பவர்கள் போலவும் நடந்து கொண்டார்கள்.

துரைசாமியின் சாட்சியம் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்கக்கூடியது என்பதற்கு உதாரணமாக வல்வெட்டித்துறைக் கூட்டத்தைப் பற்றிய அவரது சாட்சியத்தை ஆராய்வோம்.

திருநாவுக்கரசு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளரா இல்லையா என்பது துரைசாமிக்குத் தெரியாது, திருநாவுக்கரசுவுக்கும் நடராஜாவுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் துரைசாமிக்குத் தெரியாது அப்படியிருக்க நடராஜாவையும் திருநாவுக்கரசுவையும் எந்த விதத்திலும் தொடர்புபடுத்திப் பார்க்காத துரைசாமி மனோரமாவின் பேச்சின் பின்னர் திருநாவுக்கரசுவைப் பார்த்து 'என்னப்பா உங்களுடைய புரக்டர் நடராசாவைப்பற்றி இப்படிப் பேசுகிறார்களே' என்று கேட்டதாகச் சாட்சியமளித்திருக்கிறார்

குறுக்கு விசாரணையின் போது முன்பின் அறியாத தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளரா இல்லையா என்று அறியாத நிலையில் ஏன் 'உங்களுடைய புரக்டர் நடராஜா' என்று கேட்டீர் என்று கேட்ட போது, திருநாவுக்கரசு பருத்தித்துறையைச் சேர்ந்தவர்; நடராஜாவும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் எனவேதான் 'உங்களுடைய புறக்டர்' நடராஜா என்று சொன்னேன் என்று துரைசாமி பதில் அளித்தார். இதன் பின்னர் திருநாவுக்கரசு உண்மையில் பருத்தித்துறையைச் சார்ந்தவரல்ல; அவர் புலோலி கிழக்கைச் சார்ந்தவர் என்பதைத் தெரியப்படுத்தியவுடன், திருநாவுக்கரசு பருத்தித்துறையைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும், நாங்கள் அவரைப் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்றுதான் [illegible] என்று ஊர் [illegible] தான துரைசாமி சாத்தியமாகப் பதிலளித்தார். தொடர்ந்து இதுபற்றி நான் குறுக்கு விசாரணை செய்தபோது கஷ்டமான நிலையில் சும்மா பகிடிக்காக கேட்டேன், என்று பதில் அளித்தார்.

திருநாவுக்கரசு சாட்சியமளிக்கையில் 'துரைசாமி தன்னிடம்' என்னப்பா உங்களுடைய பருத்தித்துறைப் புரக்டர் நடராஜாவைப்பற்றி பேசுகிறார்களே என்று கேட்டதாகத்தான் சாட்சியமளித்திருக்கின்றார். திருநாவுக்கரசு சாட்சியத்தில் பருத்தித்துறையும் புகுத்தப்பட்டிருந்தது கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

9ம் திகதி கூட்டத்தில் துரைரத்தினம் பேசுகையில் மேடையில் ஏறி கலாட்டா செய்ய முற்பட்ட நபரை பரம்பரை பாம்பரையாகத் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களான குடும்பத்தைச் சேர்ந்த நாராயணசாமியைத் தனக்குத் தெரியாது என்று திருநாவுக்கரசு கூறியது உண்மையல்ல. இந்தச் சம்பவம் சம்பந்தமாகத் திருநாவுக்கரசுவின் சாட்சியத்தை நம்பக் கூடாயது.

நடராஜாவைப் பொறுத்தமட்டில், இந்தத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டவர் என்றமுறையில் முதலாம் எதிர் மனுதாரான துரைரத்தினத்தைப் போலவே இவரும்பாரபட்சமற்ற சாட்சி என்று சொல்வதற்கில்லை; அதிலும் அதிகமான வேலையுள்ள வழக்கறிஞர் என்ற முறையிலும் தேர்தல் பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தவர் என்றமுறையிலும் அந்த நாட்களில் நடந்த சம்பாஷணைகளைப்பற்றி எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பார் என்று எதிர்பார்க்க முடியாதுதான் சில விஷயங்களை அவர் மறந்திருக்க நியாயமிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

செல்வி மனோரமா பேசியதாகச் சொல்லப்படும் பேச்சினைப்பற்றி திரு. நடராஜா கவலைப்பட்டிருந்தால் அது பாரதூரமான பேச்சு என்று நினைத்திருந்தால் அவர் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். துண்டுப் பிரசுரங்களாக அடித்து தனது பதிலைத் தெரியப்படுத்தியிருக்கலாம் அடுத்தடுத்து நடந்த கூட்டங்களில் [illegible] நடவடிக்கை எடுத்திருக்கலாம்

ஆனால் இவற்றில்ஒன்றையேனும் அவர் செய்யாததிலிருந்து மனோரமாவின் பேச்சினைப் பாரதூரமாகக் கருதி திரு. நடராஜா கவலை கொள்ளவில்லை என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது.

கூட்டத்தினைப்பற்றிய குறிப்புகளை எடுத்தபோலிஸ்காரர் காங்கேசன் துறைப் போலிசைச்சேர்ந்த பாசேந்திரம்தான் என்று இன்ஸ்பெக்டர் சிரிவர்த்தன நடராஜாவிடம் சொல்லிய போதும் தேர்தல் முடிந்த நான்கைந்து நாட்கள் கழிக்கும்வரைக்கும் பாசேந்திரனைச் சந்திக்க நடராஜா எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை இதிலிருந்தும் அவர் அவ்வளவாகக் கவலைகொள்ளவில்லை என்றுதான் நினைக்கவேண்டியதிருக்கிறது.

பாசேந்திரத்தின் சாட்சியத்தை முற்றாக நம்பவேண்டும் என்பது எனது வாதமாகும், பாசேந்திரன் எந்தப் பக்கத்திற்கும் பட்சமாகச் சாட்சியம் கூறியதாக மனுதார். தரப்பினும் சொல்லவில்லை குறுக்கு விசாரணையின்போதும்அவர்கூறியவை பிழையென்று எந்தவகையிலும் நிரூபிக்கப்படவில்லை

இன்று விசாரணை நடைபெறும்போது திரு. கே. சி. நடராஜா மனுதாரரின் வழக்கறிஞர் தொகுப்புரை நிகழ்த்துவார்:

### 125 எம். பி.க்களுக்கு கார் கிடைக்கும்

கோட்டை, திங்கள்

நேற்று நடைபெற்ற அரசாங்க ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் 125 ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக கார் வழங்கப்படவேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

### பஸ் கட்டணம் உயரும்

கோட்டை, திங்கள்

அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. குறைந்த தூரப் பாதைகளில் முதற் கட்டணத்திற்கான கட்டணம் மாத்திரம் அதிகரிக்கப்படவிருக்கிறது. இக்கட்டணம் ஐந்து சதத்திலிருந்து பத்து சதமாக அதிகரிக்கப்படும். இதனுல் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏழரைக் கோடி ரூபா வருமானம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ரயில்வே பார்சல் கட்டணங்களும் 20 சத விதம் அதிகரிக்கப்படுமெனத் தெரியவருகிறது. ஆனுல் டிக்கெட்டுக்குரிய கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது

### வீடமைப்பு திட்டம்

கோட்டை, திங்கள்

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுள்ள ஊழியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அரசாங்கம் வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது. கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்காவின் சிபார்சிலேயே இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.


## விற்பனையாகின்றது

ஈழநாடு

10-வது ஆண்டு நிறைவை யொட்டி நடாத்திய சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளில் பரிசு பெற்றவை நூலுருவில் வெளிவந்துள்ளன.

### கங்குமட்டை

(சிறுகதைத் தொகுதி)

செங்கை ஆழியன் எழுதிய — கங்குமட்டை
செம்பியன் செல்வன் எழுதிய—பூவும் கனியும்
அப்பச்சி மகாலிங்கம் எழுதிய ஆறுதற்பரிசு
எம். ஏ. ரஹ்மான் எழுதிய —சிறுகை நீட்டி
மு கனகராசன் எழுதிய—சுண்டுவிரல் மெட்டி

தொகுதி 1: விலை ரூபா ஒன்று

### விடிய இன்னும் நேரமிருக்கு

(ஓரங்க நாடகங்கள்)

செம்பியன் செல்வன் எழுதிய
விடிய இன்னும் நேரமிருக்கு
'யாழினி' எழுதிய தாஜ்மகால்
உடுவை தில்லைநடராசா எழுதிய — பூமலர்
மு. கனகராசன் எழுதிய
கிலுவையும் குத்துவாளும்

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடங்கள்: ச கிருஷ்ணசாமி, பெரியகடை
யாழ்ப்பாணம்
ரகுநாதன் பதிப்பகம்
இல: 303, காலி வீதி, கொள்ளுப்பிட்டி
கொழும்பு—3

'ஈழநாடு'
த. பெ. எண் 49 — யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இரட்டைத் தொகுதி மூலமாவது பிரதிநிதித்துவம் வேண்டும்"

— எம். ஸி.

கைதடி, திங்கள்

'நியமனத்தின் மூலம் ஆட்சிமன்றப் பி, திநிதி தெரிவுசெய்யப்படும் முறை இருப்பது நமது சமூகத்திற்கு நல்லதல்ல. நாம் இந்த முறையினால் திருப்தி கொள்ள முடியாது' என்று அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமனப்பிரதிநிதியுமான திரு எம். ஸி. சுப்பிரமணியம் கூறினர்.

'நாமும் மற்றவர்களைப் போல் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தெரிவுசெய்யப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் நமது சமூகத்தவர்கள் கூடுதலாக வாழும் இடங்களைப்பிரித்து நமது பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்யக்கூடிய முறையை உருவாக்க வேண்டும். இல்லையேல் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளை ஆக்கவேண்டும். புதிதாகப் பாராளுமன்றத் தொகுதி புனரமைப்புச் செய்யப்படும்போது நாம் விழிப்புடன் இருந்து நமக்கெனத் தொகுதிகள் பிரித்தெடுப்போம், இல்லையேல் இரட்டைத் தொகுதிகள் ஆக்கச் செய்வோம். இதற்கு இப்போதைய அரசும் தயாராக இருக்கிறது என்றும் திரு. சுப்பிரமணியம் கூறினர்.

கைதடி மேற்கு சரஸ்வதி வாசிகசாலையில் முன்னள் கிராமசபை உறுப்பினர் திரு பொன். செல்லையா தலைமையில் நடந்த வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு சுப்பிரமணியம் பேலும் கூறியதாவது "நமது சமூகத்தவர்களை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளாகிய நிலமின்மை, வீடின்மை பொருளாதாரம், கல்வி ஆகியன உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு அரசாங்கம் நமது சமூகத்திற்கு விசேஷசலுகைகள் அளிக்கவேண்டும். வெளிநாடுகளில் பின்தங்கிய ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு அரசாங்க உத்தியோகங்களிலும் மற்றும் எல்லா இடங்களிலும் விசேஷ சலுகைகளும்இருக்கின்றன. நமது அயல் நாடான இந்தியாவில் இருப்பது போன்று இங்கும் இருக்கவேண்டிய தன் அவசியத்தை அரசாங்கத்திற்கு அறியப்படுத்தி புதிய அரசியல் அமைப்பில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

சமூகக்குறை பாட்டுச் சட்டத்தில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டியதன் பேரில் இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டு வலுவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்மூலம் இனிமேல் ஆலயங்களின் முதலாளிமார்கள் என்ருலும் சரி, நமது சமூகத்தவர்களுக்குப் பாகுபாடு காட்டும் கடை முதலாளிமார்களென்ருலும் சரி நம்மை வலிந்து கூப்பிட்டுசமத்துவமாக நடத்து வதற்கு முன்வந்துள்ளனர். அண்மையில் கொடிகாமத்தில் நடந்த தேநீர் கடைப் பிரவேசம் ஒரு எடுத்துக் காட்டாகும். கொடிகாமத்துத் தேனீர்க்கடை முதலாளிமாருக்கு நன்றி கூறுகிறன்.

சமாதான நீதிபதியும் ரேவகச்சேரிக்கிளை அ.இ.சி. தமிழர் காரியதரிசியுமான திரு கே. தவசிப்பிள்ளை, சி. கந்தையா ஆகியோரும் பேசினர்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 23-ம் திகதி (6-4-71)

மேடம்- இல்லறத்தில் இனிமை தவழும், வெளியீடத் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்,

இடபம்- வணிகர்கள் வாழ்க்கைசோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

மிதுனம்- பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட லாபமுமுண்டு.

கடகம்- போட்டாபோட்டிகளில் வெற்றியுண்டு. பகைத்தவர்கள் நட்புரிமை கொண்டாடுவார்கள்.

சிம்மம்- பூமிப்பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்குவிவகாரங்கள் தவிர்க்கப்படும். பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்,

கன்னி- புதிய தொடர்பு ளின் மூலம் முன்னேற்றமுண்டு. நீண்டநாள் பிணி குணமடைவதற்கான அறிகுறிகள் தென்படும்.

துலாம்- மனநிறைவுக்கும் இடமுண்டு. மதிப்பும் உயரும். அறிவாற்றலால் அரசபோகமும் கிடைக்கும்.

விருச்சிகம்- சிந்தனை அலைகள் மோதும், செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசரமுடிவின்மூலம் குறைகேட்க நேரிடும்.

தனுசு- நல்லதைச் செய்வீர்கள். நலன்கள் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள்.

மகரம்- பண நெருக்கடி விலகுவதற்கான அறிகுறிகள் தென்படும். புத்திர வழியால் உதவியும் கிடைக்கும்.

கும்பம்- பொருமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்ளுவீர்கள்.

மீனம்- பெண்களுடனன தொடர்புகள் பெருகும். பிரம்மசாரிகள் வாழ்க்கையில் காதல்கணை தாக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## "சிறிமா அரசுக்கு நன்றி"

தெல்லிப்பழை, திங்கள்

'சமூக ஒழிப்புக் குறைபாடுகள் சட்டத்திலுள்ள குறைபாடுகளை அறவே நீக்கி, அதை பூரணமாக வலுவுள்ளதாக நிறைவேற்றியமைக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கு நாம் நன்றிக்கடன் செலுத்த வேண்டியுள்ளது'

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் சாவகச்சேரித்துறைக் கிளை வருடாந்த பொதுக் கூட்டத்தில் மகாசபை பொதுக் காரியதரிசி திரு. பி. ஜே. அன்ரனி பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வை. கதிரவேலு ஆசிரியர் தலைமையில் தெல்லிப்பழை அண்ணமார் கோவில் முன்றலில் கூட்டம் நடைபெற்றது,

திரு. அன்ரனி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது;

முன்னைய அரசாங்கம் சமூக ஒழிப்புக் குறைபாடுகள் சட்டத்திலுள்ள சில தடைகளை நீக்கத் தவறியமையாலேயே எமது போராட்டங்கள் வெற்றியளிக்க முடியாமல் போனது. ஆனல் தொடர்ந்து சகல துறைகளிலும் எமது உரிமைகளைப் பெற நாம் முன்னிற்க வேண்டும். எமக்கு இப்போது சட்டம் பக்கபலமாக உதவியளிக்கிறது. ஆகவே எமக்குள் எதுவித கட்சி வேற்றுமைகளிருந்தாலும் இப்பொழுதைய அரசாங்கம் எமது சமூகத்தின் நலன்கருதி ஒரு நியமன எம். பி. யை ஆட்சிமன்றத்துக்கு தெரிவு செய்தும் அவர்மூலம் சமூக ஒழிப்புக் குறைபாடுகள் சட்டத்தை பூரணமாக நிறைவேற்றியமைக்கும் நாம் ஆதரவு தெரிவிக்கும்முகமாக வரும் பத்தாம் திகதி பொது ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடாத்தி எமது ஒற்றுமையை உணர்த்த வேண்டும்"

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு வை. கதிரவேலு, உபதலைவர்: திரு. இ. பசுபதி, காரியதரிசி; திரு. மு. வடிவேலு, உபகாரியதரிசி திரு, எஸ். கதிரவேலு, தனாதிகாரி திரு. ச. ஐயாத்துரை,

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் சனத்தொகை விகிதாரத்துக்கமைய பொதுச்சபைக்கென நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

(வா மா)

---

*ஆசிரியர்கள்

## ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட வேண்டும்'

யாற்ப்பாணம், செவ்

'வடஇலங்கையில் பதினுக்கு மேற்பட்ட ஆசிரிய சங்கங்கள் உண்டு. ஆசிரியர்கள் தமது பிரச்னைகளுக்கு குரலெழுப்புவதற்கு முன்பாக ஸ்தாபன ரீதியில் ஒன்றுபட வேண்டும். ஆசிரியசங்கங்களில் சேராத ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இன்னமும்இலங்கையில் உள்ளனர். அவர்கள் ஏதாவதொரு ஆசிரிய சங்கத்தில் சேர வேண்டும்

யாழ்ப்பாணம் புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஜாதிககுருசங்கத்தின் யாழ்ப்பாண நகரக்கிளை ஆரம்பக்கூட்டத்தில் பேசிய ஜாதிககுருசங்க மத்தியகமிட்டி உறுப்பினரான திரு. வ. கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்'

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் மக்கள் அரசாங்கம் ஆசிரியர்களுக்கு அரசியலுரிமை வழங்கியுள்ளது. ஆசிரிய இடமாற்றச் சபைகளை நிறுவியுள்ளது. தொழிற்சங்கங்களுக்கு ஜனநாயக பாதுகாப்பளித்துள்ளது. இன்னமும் தொழிற்சங்கங்களுக்கு கூடுதலான நன்மை செய்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

"ஆசிரியர்கள் தமது பிரச்னைகளைத் தீர்க்க அரசியல்வாதிகளையும் அரசாங்கத்தையும் நம்பியிராமல் தாமே குரலெழுப்பிப் போராடவேண்டும்" என்று வடபிரதேசக் காரியதரிசி திரு. எம் குமாரசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

பீ. கனரத்தினம் எஸ். சண்முகரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவின் போது தலைவராக பீ. லோரன்பிள்ளையும், உபதலைவராக பீ. வில்லியமும் காரியதரிசியாக ஏ. எல். தாக்கியும் உபகாரியதரிசியாக என். கே. ரகுநாதனும் தனாதிகாரியாக ஆ. மாட்டினும் தெரிவு செய்யப்பட்டனர்,

## நரவற்குழியில் எம். ஸி. க்கு வரவேற்பு

நாவற்குழி, திங்கள்

நாவற்குழிப் பகுதியில் குடியிருக்க வீட்டு வசதியற்ற சிறுபான்மைத் தமிழருக்கு விரைவில் வீட்டுத் திட்டம் ஏற்படுத்திக் கொடுப்பதாக நாவற்குழியில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது நியமன எம். பி. திரு எம். ஸி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறினர்:

திரு. சுப்பிரமணியம் சாவகச்சேரித் தொகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களின் குறைகளைக் கண்டறியுமுகமாக வந்திருந்தபோது அவருக்கு நாவற்குழியில் அங்குள்ள சிறுபான்மைத் தமிழர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்ட[illegible] குழிச் சிறுபான்மைத் தமிழ

ரின் கோரிக்கைகள் [illegible] இயமகஜியரா சன்றும் எம். [illegible] டது.

## கரபந்தாட்டம்

சுழிபுரம், திங்கள்

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பகுதிகளிலும் ஒரு கரபந்தாட்டத்திடல் அமைக்க விளையாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. சுழிபுரம் கிராம சபைப் பகுதியில் அமையவிருக்கும் கரபந்தாட்டத்திடலை வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். விளையாட்டுப் போதனசிரியர் திரு ஈ சுப்பிரமணியம் இதற்கான உதவி வேலைகளை கவனித்து வருகின்ருர். இம்மாத பிற்பகுதியில் விளையாட்டுகள் ஆரம்பிக்கப்படும் என நிலையச் செயலாளர் திரு க வசம தேவன் தெரிவித்தார்.

## 'சமூகக் கறைகளை நீக்குவதற்கு உழைத்தவர்'

உடுத்திரபுரம், திங்கள்

காலஞ்சென்ற திரு. ஆ. மார்க்கண்டன் கடந்த பல ஆண்டுகளாக அகில இலங்கைக் காந்தி சேவாசங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவராகக் கடமையாற்றியவர் நமது சமூகத்தில்நீண்டகாலமாக இருந்து வந்த மூன்று பெருங் கறைகளை நீக்குவதற்குத்தன்னுலானவற்றைச் செய்தவர் தீண்டாமை ஒழிப்பு ஆலயப்பிரவேசம் ஆலயங்களில் பலியிடுதலைத் தடுத்தல் ஆகிய விஷயங்களில் தன்னுலானவற்றைச் செய்ததுடன் தனதுவாழ் நாளிலேயே சுன்னுகம் ஐயனர் கோவிலில் பலியிடுதலை நிறுத்துவதில் வெற்றியும் கண்டவர்" என்று காந்தி சேவாசங்க உபதலைவர்களுள் ஒருவராகிய திரு. ஆ. ம. செல்லத்துரை திரு. மார்க்கண்டனின் மறைவு ஓராண்டுப் பூர்த்தியை யொட்டி காந்தி நிலையத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் குறிப்பிட்டார்.

திரு. மார்க்கண்டனின் ஓராண்டு மறைவு தினத்தில் சுன்னுகம் ஐயனர் கோவில் சகலருக்கும் திறந்து விடப்பட்டமை அன்னரின் ஆத்ம சாந்திக்குத் துணைபுரியும் என அவர் கூறினர்.

திரு,க நாகலிங்கம் ஆசிரியர் பேசுகையில் திரு. மார்க்கண்டன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகியவர் என்ருர்

நிலைய மாணவரின் கூட்டுப்பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் வைபவத்தில் இடம்பெற்றன

திரு: மார்க்கண்டன் குடும்பத்தினர் அன்னரின் உருவப்படமொன்றையும் சில நூல்களையும் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தனர்.

## மெய்வல்லுநர் போட்டி

நெடுங்கேணி, செவ்.

நெடுங்கேணி மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் ஆட்டப் போட்டி இன்று மேற்படி பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. நடராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக மாவட்டக் கல்வி அதிகாரி திரு. கி. மாணிக்கவாசகர் பிரிவுக் காரியாதிகாரி திரு. கே. குட்ணர் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. டபிள்யு ஆர். அருளையா ஆகியோர் கலந்து கொள்வார்கள் போட்டி முடிவில்பரிசில்கள் வழங்கப்படும்.

0 0 0

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளின் கனிஷ்ட மெய் வல்லுநர் போட்டி இன்றும் நாளையும் கிளிநொச்சி உருத்திரபுர மைதானத்தில் நடைபெறுகிறது. இப்போட்டிக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. இராசநாயகம் தலைமைதாங்குகிருர். பிரதம அதிதியாக பிரதம கல்வி அதிகாரி, திரு, ஏ. சந்திரசேகர கலந்துகொள்கிருர்.

## இன்று 342—வது சீட்டிழுப்பு

கொழும்பு, செவ்வாய்

தேசிய லொத்தர்சபையின் 342-வது இலக்க சீட்டிழுப்பு இன்று மாலை 5-15க்கு கொழும்பு தேசிய லொத்தர்சபைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. பரிசுக்குரிய தொகை உடனடியாகவே காரியாலயத்தில் வைத்துக் கொடுக்கப்படும்.

## பனிப்புலத்திற்கு ஆஸ்பத்திரி

சுழிபுரம், திங்கள்

பனிப்புலம் கிராமத்துக்கு விரைவில் வைத்தியசாலை ஒன்று நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது சங்கானைப் பகுதி சுகாதார உத்தியோகத்தர் இதற்கான சகல புள்ளிவிபரங்களையும் திரட்டி மேலதிகாரிகளின் கவனத்துக்குச் சமர்ப்பித்துள்ளார் பனிப்புலம் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையில் இதுவும் ஒன்ருகும்.

## பதில் நீதவான்

யாழ்ப்பாணம், செவ்

வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் இம்மாதம் 8-ம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதவானுகக் கடமையாற்றி வருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாகிஸ்தான் விமானங்களுக்கு எண்ணெய் வழங்க வேண்டாம்'

## இலங்கை அரசுக்கு பாக். எம்.பி. வற்புறுத்து

புதுடில்லி, ஏப். 5 இலங்கை வழியாகச் செல்லும் பாகிஸ்தான் விமானங்களுக்கு எரிபொருள் கொடுத்துதவ வேண்டாம் என்று பாகிஸ்தான் தேசிய சட்டசபை உறுப்பினர் ஒருவர் கோரியிருப்பதாகத் தெரிகின்றது

இலங்கை வழியாக கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்லும் பாகிஸ்தான் விமானங்களுக்கு இறங்கும் வசதியும் எண்ணெய் எரிபொருள் எடுக்கும் வசதியும் செய்துகொடுக்க வேண்டாமென்று ஆபிதலி என்ற அந்த உறுப்பினர் கேட்டுக்கொண்டிருக்கிறார், இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் அவர் இக்கோரிக்கையை விடுத்திருக்கிறாராம்

கிழக்குப் பாகிஸ்தானில் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள ராணுவத்தினருக்கு 'சப்ளை'கள் செல்லும் பாதைகள் பலவற்றை ஷேக் முஜிர்புரஹ்மானின் ஆட்கள் துண்டித்து விட்டார்களாம்,

ராஜ்சாகியில் ராணுவம் தொடர்ந்து விடுதலைப்படையினரின் நெருக்குதலுக்கு உள்ளாகிவருகிறார்களென்று வடக்கில் ரங்பூரிலிருந்து ராணுவத்தினர் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகின்றது. விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள படைகளுடன் ஆயிரக்கணக்கான புதிய தொண்டர்களும் இப்பொழுது சேர்ந்துகொண்டிருக்கிறார்களாம்.

குல்தியா பகுதியில் பத்மா என்ற பெயர் கொண்ட பாலத்தை விடுதலைப்படையினர் காவல் புரிகின்றனராம். இந்தப் பாலத்தைத் தகர்த்துவிட ராணுவத்தினர் முயன்றபோதிலும் தொண்டர்கள் அதை முறியடித்துவிட்டார்களென அங்கு போய்த் திரும்பிவந்துள்ள இந்திய நிருபர் ஒருவர் தெரிவிக்கிறார். சாலைகளில் தடைகளை மக்கள் போட்டுவைத்திருப்பதைத் தாம் கண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்-

மேற்குப்பாகிஸ்தானிலும் நான்கு நகரங்களில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறதாம். ராணுவச் சட்டங்களை எதிர்த்தும் சம்பள உயர்வு கோரியும் அங்கு தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் இறங்கியிருக்கிறார்களாம்.

## கிழக்குப் பாக். மக்களுக்கு இலங்கையில் அனுதாபம்

கொழும்பு. திங்கள் கிழக்கு பாகிஸ்தான் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு அனுதாபத் தந்தியொன்றைஅனுப்பியுள்ளது.

தங்கள் கவலையை அதிபர் யாஹ்யாகானுக்கும் அறிவிக்கும்படி கழகம்கேட்டுள்ளது. கிழக்குப் பாகிஸ்தானில் அப்பாவிமக்களை அடித்து நொறுக்குவதற்கு கழகம் தனது கண்டனத்தைத் தெரிவித்திருப்பதுடன் வங்காள தேசத்தை அங்கீகரிக்கும்படியும் கேட்டுள்ளது.

### முஸ்லிம் ஸ்தாபனங்கள் கண்டனம்

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம், முற்போக்கு இஸ்லாமிய வாலிபர் இயக்கம் மற்றும் இஸ்லாமிய வார சஞ்சிகை வெளியீட்டாளர்கள் ஆகிய முஸ்லிம் ஸ்தாபனங்கள் கூட்டாக விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மற்றைய நாடுகளின் உள்விவகாரத்தில் தலையீடுவதில்லையென்ற போர்வையில் கிழக்குப் பாகிஸ்தான்கொடுமைகளை இலங்கை அரசாங்கம்கண்டிக்காமலிருப்பதைக் குறைகூறியுள்ளார்கள். இந்நாட்டுத்தலைவர்கள் மௌனமாக இருந்தாலும் மனித மனச்சாட்சி மௌனமாக இருக்கமாட்டாதுஎன அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

ஒரு சில தினங்களுக்குள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட மூன்றுலட்சம் பேர் கொன்றுகுவிக்கப்பட்டிருப்பது ஹிட்லர்ஆட்சியில்கூட நடைபெருத ஒரு சம்பவமாகும். இதனை படுமோசமான, காட்டுமிராண்டி ராணுவ, சர்வாதிகாரச் செயல் என நாங்கள் கண்டிக்கிறோம். எமது ஆதரவையும், அனுதாபத்தையும் வங்காளதேச மக்களுக்குத்தெரிவித்துக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் இளைஞர் பேரவையும் யாஹ்யாகான் ஆட்சியைக் கண்டிக்கும் ஒரு மகஜரை கையளித்துள்ளது.

(இ பி ஏ(

### ஐந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கிளர்ச்சிக்காரர் இருவர் பொலிஸ்நிலையப் பகுதியிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிப்பிரயோகம், எறிகுண்டுவீச்சு ஆகியவைகளினால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயசேகரா மற்றும் பொலிஸ் சார்ஜன்ட், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் காயமடைந்தனர். கிளர்ச்சிக்காரர் இருவரை, கிளர்ச்சிக்காரர் கோஷ்டியொன்று எடுத்துச் கொண்டு காட்டுக்குள் ஒடி ஒளிந்துவிட்டது.

வெள்ளவாயாவில் நடைபெற்றஇச்சம்பவத்தைநாட்டில் நாசகாரச் செயல்களை உருவாக்கியோரின் உச்சக்கட்ட நடவடிக்கையாக அரசு கருதுகிறது. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி அரசாங்க நிர்வாகத்தைச் சீர்குலைப்பதே இக்கிளர்ச்சிக்காரர்களின் நோக்கமாக இருப்பதாக அரசு கருதுகிறது. இதன்காரணமாகக் கண்டி, மொனருகலை, அம்பாறை, பதுளை, நுவரேலியா ஆகிய மாவட்டங்களில் இன்று முதல் மாலை 7 மணியிலிருந்து காலை 5 மணிவரை ஊரடங்கு உத்தரவு அவசரகாலச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விபரம் அரசாங்கம் ... தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உருத்திரபுரம் கொலைவழக்கு: எதிரிக்கு 2 வருட கடுழியம்

யாழ்ப்பாணம், செவ் உருத்திரபுரம் கொலை வழக்கில், எதிரிக்கு 2 வருடக் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. விசாரணை நடுவில் எதிரி கைமோசக் கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் 13ம் தேதி உருத்திரபுரத்தில் காப்புலிகந்தையா என்பவரை சின்னையா கந்தசாமி என்ற வாலிபன் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அரசாங்கத்தால் எதிரிக்காக அட்வகேட் சிவபாலேந்திரன் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரியதரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை இம் மாதம் 10ம் தேதிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.


### தேவை

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு 14 வயதுக்கும் — 19 வயதுக்கும் இடைப்பட்ட பையன்கள் தேவை. உடன் நேரில் வரவும். V. T. & Sons, பல் கட்டுபவர், கண் பரிசோதகர். 11 மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2751


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## டட்லியின் ஜனநாயகம்: கூட்டணி அமைச்சர்கள் சாட்டை

கண்டி, திங்கள் "முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தன் தந்தை சிறை சென்றது பற்றிப் பேசிவருகிறார் அவர் தந்தை சிறைசென்றது என்னவோ உண்மைதான் மதுவிலக்குச் சம்பந்தமாக அவர் சில தினங்கள் சிறைசென்றிருந்தார் ஆனால் என்னை, ஏகாதிபத்தியத்தை எதிர்த்தமைக்காக அவரது தந்தை கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் சிறைக்கு அனுப்பினர்."

இவ்வாறு போகம்பரையில் நடைபெற்ற அரசாங்கக் கட்சியின் கூட்டத்தில் பேசும்போது நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா தெரிவித்தார். முன்னைய பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவின் ஜனநாயகமானது அவரால் ஒருபோதும் நடை முறைப்படுத்தப்படாததாகும். அவர் தன்னைப் பற்றி 'ஜனதின' என்னும் பத்திரிகை ஒரு விடயத்தை வெளியிட்டமையினால் ஒரு வருடத்துக்கு மேலாக அதனைத் தடுத்துவைத்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில், நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியிருக்கும் இந்த வேளையில், முன்னாள் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா இலங்கையில் இன்றைய ஜனநாயகம்பற்றி சிரித்துக்காலம் கழிக்கும் தமது வழமையான பொழுது போக்கைச் செய்துகொண்டிருக்கிறார் என்றார்

இந்த நாட்டில் அவர் மட்டும்தான் ஒரேயொரு ஜனநாயகவாதிபோலும் ஜனநாயகம் அவரால்தான் காப்பாற்றமுடியுமென்றும் அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்தக் கற்பனையை நாட்டுமக்கள் மே 27ந்தேதி நம்ப மறுத்து வேறு தீர்ப்பு அளித்துவிட்டார்கள் என்றார் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா.

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு டி. பி இலங்கரத்தின பேசுகையில். இந்த அரசாங்கம் அவசரகாலத்தைப் பிரகடனப்படுத்தியதை ஜனநாயக விரோத செயல்என்றுகண்டு பிடித்து வருகிறார். ஆனால் இந்த நாட்டில் ரத்தக்களரிக்குவழிவகுக்கக்கூடிய அராஜக நடவடிக்கைக்கான திட்டங்கள்பற்றி அவர் எதுவும் கூறாமல் இருந்து வருகிறார் என்றார்

## அப்புத்தளையில் தனித்தமிழ் வித்தியாலயம்

அப்புத்தளை. திங்கள் அப்புத்தளையில் தனித்தமிழ்மகா வித்தியாலயம் அமைக்கப்படவிருக்கிறது. அப்புத்தளைத் தமிழ் மகா வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியசங்கக் கூட்டத்தில் இம்முடிவு செய்யப்பட்டது இதுவரை காலமும் சிங்கள மகாவித்தியாலயத்தின் கீழே தமிழ்ப்பிரிவு இயங்கிவந்தது தனியாகக் கட்டிடம் அமைத்து தனித்தமிழ் வித்தியாலயமாக இயங்கும்தீர்மானம் சம்பந்தமாக அப்புத்தளை ஆட்சி மன்றஉறுப்பினரும் சுகாதார அமைச்சருமான திரு டபிள்யூ பி ஜி ஆரியதாசாவை பெற்றோர் ஆசிரிய சங்கத்தார் கோஷ்டி 6ந் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசவிருக்கிறது

அப்புத்தளையில் தனித்தமிழ் மகாவித்தியாலயம் ஒன்றை கட்டிமுடிப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஏகமனதாக தீர்மானம் செய்துள்ளது கூட்டம்பாடசாலை பதில் அதிபர் திரு என் தேவதாசன் தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது

கூட்டத்திற்கு இந்து முஸ்லீம் பெற்றோர்கள், அனுதாபிகள் தோட்டச் சங்கப் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்,

இக்கூட்டத்தில் பின்வருவோர் பெற்றோர் ஆசிரிய சங்க நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு எஸ் தேவதாசன் பதில் அதிபர், உப தலைவர்கள், ஜனாப் அசீஸ்கான், (திரு) எம் மாரியப்பா, செயலாளர்: திரு எம் மருதை, இணைச் செயலாளர்: திரு கே எஸ் சதாசிவம் (ஆசிரியர்), பொருளாளர்: திரு ஏ சேராமுதலி இணைப்பொருளாளர்: திரு எஸ் வேலுப்பிள்ளை. 19பேர்கள் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பாடசாலை பதில் அதிபர் திரு எஸ் தேவதாசன் தனது முன்னுரையில் குறிப்பிட்டதாவது:

அப்புத்தளை தமிழ் வித்தியாலயத்திற்கு தனிதமிழ்பாடசாலை அமைக்க வேண்டுமென்றகருத்தை வலியுறுத்திப் பேசினார் 800 மாணவர்கள் கல்விகற்கும் மிகப்பெரிய தமிழ்ப் பாடசாலையானது சிங்களப் பாடசாலையுடன் சேர்ந்து இயங்குவது இருபாலாருக்கும் கஷ்டமானதாகும்,

.....

## புற்று நோய்க்கு மருந்து

நியுயோர்க், ஏப்ரல் 4 தோல்புற்றுநோய்க்கு மிகவும் அரிதான ஒரு மருந்தை அமெரிக்க டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். கடந்தயுத்தகாலத்தில் உபயோகிக்கப்பட்ட விஷவாயுக்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ரசாயனக் கலவையைக் கொண்டு இந்த மருந்து கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org